# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை

## 2007-2008

தமிழ் நாடு அரசு அச்சுத்துறை ஆணையரால் தமிழ்நாடு அரசுக்காக அச்சிடப் பெற்றது

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை 2007 - 2008

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
# ஆண்டறிக்கை 2007-2008

## பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | செயல்களும் கடமைகளும் | 2 - 3 |
| 2 | நேரடித் தெரிவுகள் | 4 |
| 3 | தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாமை | 4 |
| 4 | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள், சட்ட முறை ஒழுங்கு முறை விதிகள், தற்காலிக நியமனங்கள், விதி தளர்த்தல் முதலியன | 5 — 7 |
| 5 | தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள் | 7 |
| 6 | அரசும் தேர்வாணையமும் | 8 — 13 |
| | **பின் இணைப்புகள்** | |
| 1 | தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல் | 15 |
| 2 | நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட புள்ளி விவரம் | 16 — 17 |
| 3 | வருவாய் மற்றும் செலவு | 18 |
| 4 | வெளியான அறிவிக்கை விளம்பரங்கள் | 19 — 20 |
| 5 | எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு விவரம் | 21 — 25 |
| 6 | பொருத்தமும் தகுதியும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாத பணிகள் குறித்த விவரம் | 26 |
| 7 | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பதவிகள் | 27 — 29 |
| 8 | ஒழுங்கு நடவடிக்கைகள். மனுக்கள் மற்றும் முறையீடுகள் விவரம் | 30 -31 |
| 9 | தேர்வாணையத்தின் ஒழுங்கு முறை விதி 1954 விதி .16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் முறைப்படுத்தியதன் விவரம் | 32 — 33 |
| 10 | தற்காலிக நியமனங்கள் மாநிலப் பணி/சார்நிலைப் பணி/அமைச்சுப் பணிகள் 24 மாதங்களுக்கு மேல் இசைவு அளித்த விவரம் | 34 |
| 11 | 1930 முதல் தற்சமயம் வரை உள்ள தேர்வாணைய தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் விவரம் | 35 — 38 |
| 12 | அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கப்படாத நிகழ்வுகள் குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான புள்ளி விவரம் | 38 |
| 13 | வரைபடங்கள் | 39 - 40 |

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை 2007-2008

முன்னுரை :-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசியலமைப்புப் பிரிவு 315-இன் படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் ஒருவர், உறுப்பினர் பதிநான்கு என்பது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். தற்போது தலைவரும், பதிநான்கு உறுப்பினர்களும் உள்ளனர்.

இவ்வாண்டிற்கான தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :-

| | |
|---|---|
| திருமதி. யாஸ்மீன் அகமது, இ.ஆ.ப. (ஓய்வு)<br>(29.06.2007 அன்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார்) | தலைவர் |
| திரு. ஆ.மு.காசிவிசுவநாதன், இ.ஆ.ப., (ஓய்வு)<br>((29.06.2007 பி.ப. பணியேற்றார்) | தலைவர் |
| திரு. அ. நவநீதகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்.,<br>(24.03.2008 அன்று பதவியிலிருந்து விலகிவிட்டார்) | உறுப்பினர் |
| திருமதி.பா. நீலாம்பிகை, எம்.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. நீ.கு. கலைச்செல்வி, பி.எஸ்.சி., பி.எல்., | உறுப்பினர் |
| பேராசிரியர். ஆர். சுப்பிரமணியன், பி.எஸ்.சி., எம்.எல்., | உறுப்பினர் |
| திரு. பெ. தீர்த்தாரப்பன், பி.எஸ்.சி., பி.டி., | உறுப்பினர் |
| திரு. இரா. செங்குட்டுவன், பி.இ., பி.ஜி.டி.எம்., | உறுப்பினர் |
| திருமதி. சி.டி. திலகவதி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.ஜி.டி.ஜே.எம்.சி., | உறுப்பினர் |
| டாக்டர். ரெ. நாராயணசாமி, எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி., | உறுப்பினர் |
| திரு. மு. இராமசாமி , எம்.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. த. சங்கரலிங்கம், பி.எஸ்.சி. பி.எல்.,<br>(14.07.2007 அன்று உறுப்பினராக பணியேற்றார்) | உறுப்பினர் |
| டாக்டர். கி. லெட்சுமணன், எம்.காம்., ஏ.சி.எஸ்.,(இன்டர்) எம்.பிஃல்., பிஎச்.டி.,<br>(06.07.2007 அன்று உறுப்பினராக பணியேற்றார்) | உறுப்பினர் |
| திருமதி. மா.சோபினி, எம்.ஏ.,<br>(02.07.2007 அன்று உறுப்பினராக பணியேற்றார்) | உறுப்பினர் |
| திரு. முகமது அலி ஜின்னா, பி.இ.,<br>(02.07.2007 அன்று உறுப்பினராக பணியேற்றார்) | உறுப்பினர் |
| டாக்டர். சேவியர் ஜேசு இராஜா, எம்.எஸ்.சி., எம்.பிஃல், பிஎச்.டி.,<br>(02.07.2007 அன்று உறுப்பினராக பணியேற்றார்) | உறுப்பினர் |
| டாக்டர். கே. மு. இரவி, பிஎச். டி.,<br>(29.03.2008 அன்று உறுப்பினராக பணியேற்றார்) | உறுப்பினர் |
| திரு. ரமேஷ் சந்த் மீனா இ.ஆ.ப.,<br>(09.04.2007 அன்று பணியேற்றார்) | செயலாளர் |
| திரு. ஆர். லால்வேனா, இ.ஆ.ப.,<br>(13.04.2007 அன்று பணியேற்றார்) | தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர் |

மார்ச் 31, 2008இன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பின் இணைப்பு-1இல் கொடுக்கப்பட்டுள்ளது.

# பகுதி-1

## செயல்களும் கடமைகளும்:

தேர்வாணையம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதன் விவரங்கள் இந்திய அரசியல் அமைப்புப் பிரிவு 320-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநிலப் பணிகளில் பணி நியமனம் பெற உரிய தேர்வுகளை தேர்வாணையம் நடத்த வேண்டும். மேலும் மாநில அரசு, தன் பணியாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும், பணி விதிகள் உருவாக்குதல் மற்றும் மாற்றம் செய்தல், ஒரு பதவிக்கு பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், பணியாளர்களுக்கு பணிக்காலத்தில் ஏற்படும் செலவினம் மற்றும் தீங்குகளுக்கான இழப்பீடு வழங்குவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்தும் தேர்வாணையத்தினைக் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகின்றது. இந்திய அரசுப் பாதுகாப்புத்துறை சார்பாக டேராடுனில் உள்ள இந்தியப் பாதுகாப்புக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் மாணவர்களை சேர்ப்பதற்கான தேர்வையும் தேர்வாணையம் நடத்துகின்றது.

## வேலைப் பளு :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப்பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

I. <u>நேரடித் தேர்வு</u>

1. **முதல் நிலைத் தேர்வு**

| | | |
|---|---|---|
| **தேர்வுகளின் எண்ணிக்கை** | : | **1** |
| **காலியிடங்களின் எண்ணிக்கை** | : | **172** |
| **தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்** | : | **1,09,851** |

2. **முதன்மை எழுத்துத் தேர்வு :-**

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | | 25 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | · | 13,485 |
| தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | . | 11,01,915 |

3. **நேர்முகத் தேர்வு :-**

| | |
|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | 18 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | 2251 |
| தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | 3705 |

4. **இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் :-**

| | | |
|---|---|---|
| இறுதி முடிவு செய்யப்பட்ட தெரிவுகளின் எண்ணிக்கை | . | 20 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 4328 |
| இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | | 4303 |

## II. இதர தேர்வு விவரங்கள்

1. **துறைத் தேர்வு**

| | | |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டில் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | · | 87180 |
| 2007 ஆம் ஆண்டில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை | : | 34105 |

2. **அரையாண்டுத் தேர்வு**

| | | |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | | 13 |
| 2008 ஆம் ஆண்டு மார்ச் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | · | 7 |

3. கல்வித் தகுதி/வயது முதலியவற்றில் விதி தளர்த்தியது : 47
4. பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல் 241 நபர்கள்.
5. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல்
   - அமைச்சுப் பணியில்; : 63 நபர்கள்.
6. ஒழுங்கு நடவடிக்கை -அரசுக்குத்தேர்வாணையம் தன் கருத்துகளை தெரிவித்த வழக்குகள் : 370 நேர்வுகள்.
7. ஒழுங்கு முறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனம் செய்யப்பட இசைவு அளிக்கப்பட்டவை : 484 நேர்வுகள்
8. வரவு மற்றும் செலவு (ரூபாய் ஆயிரங்களில்)

| | |
|---|---|
| வரவு | 4,85,71 |
| செலவு | 20,88,39 |

வரவு மற்றும் செலவின விவரங்கள் பின் இணைப்பு-3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

9. **அறிவிக்கைகள் :**

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தில் பல்வேறு பணிகளில் 81 பதவிகளுக்கான காலியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி 32 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. அப்பதவிகளின் காலியிடங்களின் எண்ணிக்கை 12,530 விண்ணப்பித்தவர்கள் 7,02,309 ஆகும். இதன் விவரங்கள் பின் இணைப்பு -4ல் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு:- மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை விளக்கும் வரைபடங்கள் பின் இணைப்பு -13ல் கொடுக்கப்பட்டுள்ளன.

10. **சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள்**

மற்ற ஒத்த பணியமைப்பு உடைய நிறுவனங்களில் ஏற்படும் முன்னேற்றங்களையும், தேர்வு முறைகளில் ஏற்படும் மாற்றங்களையும் இத்தேர்வாணையம் அவ்வப்பொழுது ஆராய்ந்து தனது தெரிவு முறைகளில் உரிய மாற்றங்களை செய்து வருகிறது.

**தொகுதி-I பணி - பாடத்திட்டம் மாற்றம் :**

துணைக்குழுவின் பரிந்துரையின்படி, தேர்வாணையம் தொகுதி-I பணியில் முதன்மை எழுத்துத்தேர்வில் புதிய பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒப்புதல் அளித்தது. தொகுதி-I பணிக்கு புதிய பாடத்திட்டத்தின்படி பொது அறிவில் இரண்டு தாட்கள் விரிவான விடை எழுதும் முறையில் நடத்தவும், அதில் ஒவ்வொரு தாளும் 3 மணிநேரம், 300 மதிப்பெண்கள் கொண்டதாக அமையும்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதிய பாடத்திட்டத்தின்படி தொகுதி-I பணிக்கு அறிவிக்கை 01.08.2007 அன்று விளம்பரப்படுத்தப்பட்டது. இம்முறையில் தேர்வு நடைபெறும் நாட்கள் மிகவும் குறைகிறது, தேர்விற்கான செலவும் குறையும், இறுதி முடிவுகளையும் குறுகிய காலத்தில் வெளியிட முடியும். மேலும் பாடங்களுக்கு இடையே ஏற்படும் வேறுபாடுகள் மற்றும் விடைத்தாட்கள் திருத்துபவர்களுக்கு இடையே ஏற்படும் வேறுபாடுகளும் தவிர்க்கப்படுகின்றன

# பகுதி-2

## நேரடித் தெரிவுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் 20 தெரிவுகளுக்கு இறுதி முடிவினை அறிவித்தது. 4328 காலியிடங்களுக்கு இறுதியாக 4303 விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தது. இறுதி முடிவு செய்த 20 தெரிவுகளின் புள்ளி விவரங்கள் பின் இணைப்பு - 2ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## முதல் நிலைத் தேர்வு

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 172 காலியிடங்களை நிரப்ப தொகுதி-I பணியில் ஒரு முதல் நிலைத் தேர்வு நடத்தப்பட்டது. இத்தேர்விற்கு 1,09,851 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

## முதன்மை எழுத்துத் தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 13,485 காலியிடங்களை நிரப்புவதற்கு 25 முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 11,01,915 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

## வாய்மொழித் தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வேறு பதவிகளில் 2251 காலியிடங்களை நிரப்ப 18 பதவிகளுக்கு வாய்மொழித் தேர்வுகள் நடத்தப்பட்டன. மொத்தம் 54 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. நேர்முகத் தேர்வுகள் முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடந்தன. சில நாட்களில் அதிகபட்சமான 7 குழுமங்கள் முற்பகலும் பிற்பகலும் இயங்கின. மொத்தம் 510 நேர்முக அமர்வுகள் நடத்தப்பட்டன. 3705 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அறிக்கைக்குரிய ஆண்டில் நடந்த முதல்நிலை, முதன்மை எழுத்துத் தேர்வுகள் மற்றும் வாய் மொழித் தேர்வின் விவரங்கள் பின் இணைப்பு-5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

# பகுதி-3

## தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாதப் பதவிகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் 24 காலியிடங்களுக்கு [உதவி மருத்துவ அலுவலர் (யூனானி) -11, ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் தேர்வு-I – 5, கணக்கு அலுவலர் நிலை-III – 8] தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையால் அவை நிரப்பப்படவில்லை. இதன் விவரம் பின் இணைப்பு - 6ல் கொடுக்கப்பட்டுள்ளது.

# பகுதி -4

**பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள், தற்காலிக நியமனங்கள் முதலியன:**

1. **பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல் :**

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலப் பணிகளில் தொடர்புடைய சார் நிலைப் பணிகளிலிருந்து பணிமாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் 24 பணிகளில் 1241 தகுதியும் பொருத்தமும் உடைய நபர்களைத் தெரிவு செய்தது. இதன் விவரம் பின் இணைப்பு-7ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. **ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள் முதலியன:**

| | | |
|---|---|---|
| அ | I. செயல்நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள் | 1080 |
| | II. (i) தேர்வாணையம் கருத்துத் தெரிவித்த வழக்குகள் | 526 |
| | (ii) தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள் | 76 |
| | (iii) உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பியது. | 10 |
| | (iv) சில ஆவணங்கள் அல்லது விவரங்கள் அரசிடம் கேட்கப்பட்ட வழக்குகள் | 468 |
| | III. வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்ட வழக்குகள் | 5 |
| ஆ | I) அரசுக்குத் தேர்வாணையத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட வழக்குகள் | 370 |
| | II) அவற்றில் அரசு நடவடிக்கை எடுத்து ஆணைப்பிறப்பித்த வழக்குகள் | 83 |
| | III) அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள் | 287 |

**இ. ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் காலச் செலவழிவு**

| | | |
|---|---|---|
| 1) | அரசு நடவடிக்ககை எடுத்து ஆணை பிறப்பித்த வழக்குகள் | 83 |
| 2) | குற்றச்சாட்டுக்குறிப்பாணை அனுப்பிய நாளில் இருந்து தேர்வாணையத்திற்கு அதன் கருத்தைக்கோர அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 10 மாதங்கள் |
| 3) | தேர்வாணையம் அரசுக்கு தனது கருத்தைத் தெரிவிக்க எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 02 மாதங்கள் |
| 4) | தேர்வாணையம் தனது கருத்தினை அனுப்பிய பிறகு ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 12 மாதங்கள் |
| | எடுத்துக் கொண்ட மொத்த சராசரிக் காலம் | 24 மாதங்கள் |

மேல்முறையீட்டு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு ஆகியவைகளில் அலுவலர்கள் தமது நேர்மைக்குப் புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள்கொண்ட வழக்குகள் என 370 வழக்குகளின் விவரம் பின் இணைப்பு-8ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 3. சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்ட 484 நிகழ்வுகளில் மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. இரண்டு நிகழ்வுகளில் தேர்வாணையம் தன் இசைவினை அளிக்க மறுத்துள்ளது.

| வரிசை எண் (1) | பணி வகை (2) | இசைவு அளிக்கப்பட்டவை (3) | இசைவு மறுக்கப்பட்டவை (4) |
|---|---|---|---|
| 1. | மாநிலப் பணி | 6 | 2 |
| 2. | சார்நிலைப் பணி | 2 | - |
| 3. | அமைச்சுப்பணி | 476 | - |
| | **கூடுதல்** | **484** | **2** |

எப்பணிகளில் எந்தெந்தப் பதவிக்கு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் துறை வாரியாக பின் இணைப்பு -9ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 4. தற்காலிக நியமனங்கள்:

கீழே குறிப்பிட்டவாறு நடப்புக்குறிய ஆண்டில் தற்காலிக நியமனம் செய்ய தேர்வாணையம் இசைவு அளித்துள்ளது.

| | **இசைவு அளிக்கப்பட்டது** | | **இசைவு மறுக்கப்பட்டது** | |
|---|---|---|---|---|
| காலம் (1) | மாநிலப் பணிகள் (2) | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (3) | மாநிலப் பணிகள் (4) | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (5) |
| 3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள் | - | 4 | - | - |
| 12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள் | - | - | - | - |
| 18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள் | - | 1 | - | - |
| 24 மாதங்களுக்கு மேல் | - | - | - | - |
| கூடுதல் | - | 5 | - | - |

24 மாதங்களுக்கு மேலும் தற்காலிக நியமனம் தொடரத் தேர்வாணையம் எந்த நேர்விலும் இசைவு அளிக்கவில்லை.

**5. விதி 20 (எ) (3)-ன் படி இசைவு அளிக்கப்பட்டவை:**

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20 (எ) (3)-ன் படி அமைச்சுப் பணியில் மாநிலத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்கு தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 63 ஆகும். எந்த நேர்விலும் இசைவு மறுக்கப்படவில்லை.

**6. விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்:**

அரசால் 31 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அனைத்து நேர்வுகளிலும் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது.

**7. விதி தளர்த்துதல்:**

அறிக்கைக்குரிய ஆண்டில் 47 நேர்வுகளில் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டன.

# பகுதி -5

## தெரிவுத் தேர்வுகள் தவிர இதரத் தேர்வுகள்

## 1) துறைத் தேர்வுகள்

2007-ஆம் ஆண்டு மே மற்றும் டிசம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 283 தாட்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன. அத்தேர்வுகளுக்கு 87910 நபர்கள் விண்ணப்பித்தனர்.

| வ.எண். | விவரம் | மே - 2007 | டிசம்பர்-2007 |
|---|---|---|---|
| 1. | மொத்த பாடங்கள் | 131 | 123 |
| 2. | தேர்வுத் தாட்களின் எண்ணிக்கை | 144 | 139 |
| 3. | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | 42338 | 44852 |
| 4. | தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | 30491 | 34381 |
| 5. | தேர்ச்சிப் பெற்றவர்களின் எண்ணிக்கை | 16401 | 17704 |
| 6 | தேர்ச்சி சதவீதம் | 54 | 51 |

## 2) அரையாண்டுத் தேர்வுகள்

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் மாநிலப் பணி அலுவலர்களுக்கு அரையாண்டுத் தேர்வு மற்றும் முதல்நிலைத் தமிழ் மொழித் தேர்வு செப்டம்பர் 2007 மற்றும் மார்ச் 2008-ல் நடத்தப்பட்டன. இவற்றில் முறையே 13 மற்றும் 7 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

3) டேராடுன் இந்தியப் பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளியில் சேருவதற்கான தேர்வை இத்தேர்வாணையம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக ஆகஸ்டு 2007 மற்றும் பிப்ரவரி 2008-ல் நடத்தியது. அதில் 111 மற்றும் 110 மாணவர்கள் முறையே கலந்துகொண்டனர்.

# பகுதி - 6

## அரசும் தேர்வாணையமும்

## அ. தேர்வாணையக் கருத்தை அரசு ஏற்காமை:-

அறிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து 6 வழக்குகளில் மாறுபட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:-

### வழக்கு–1

*அரசாணை (2டி) எண். 66, ஊரக வளர்ச்சி (ப.அ4) துறை, நாள் 18.10.2007.*

அரசு, டிசம்பர் 2006ல் திரு.ஜே.எம்..மனோகர், விரிவாக்க அலுவலர் (கணக்குகள்) என்பவருக்கு வழங்கப்பட்ட "கண்டனம்" எனும் தண்டனையை எதிர்த்து அன்னார் அரசுக்கு அளித்த மேல்முறையீட்டின் மீது தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

தேர்வாணையம் இவ்வழக்கினை ஆய்வு செய்து, ஊரக வளர்சித் துறை இயக்குநர் அவர்களின் கண்டறிந்த முடிவும் அவர் மீது குற்றச்சாட்டுகளுக்கு அளிக்கப்பட்ட கண்டனம் என்னும் தண்டனை குறைந்த பட்சமே என்பதாலும், இந்த வழக்கில் வழங்கப்பட்ட தண்டனை ஆணையில் குறுக்கீடு தேவையில்லை என்று தேர்வாணையம் கருதியதால், மேல் முறையீட்டாளர், மேல்முறையீட்டில் கருதப்படத்தக்க வகையில் புதியதாக முகாந்திரங்கள் ஏதும் சமர்ப்பிக்காததால் அம்மேல் முறையீட்டை சாரமற்றதாகக் கருதி தள்ளுபடி செய்யலாம் எனக் கருதி அவ்வாறே தனது ஆலோசனையை அரசுக்கு வழங்கியது.

ஆனால், அரசு, மேல்முறையீட்டாளர் தனது மேல்முறையீட்டில் தனக்கு ஒரு வருட காலத்திற்குள் இருமுறை பணிமாற்றம் செய்யப்பட்டது என்றும், மேலும் தான் டி2 இருக்கையிலிருந்து இந்திரா நினைவுக் குடியிருப்பு பிரிவிற்கு பணிமாற்றம் செய்யப்பட்டபோது அம்மாறுதல் ஆணையில் மறு பரிசீலனை செய்யச் சொல்லி ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு மனு அளித்து, அம்மனு ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஆய்வில் உள்ளது என்ற எண்ணத்தில் டி2 இருக்கையில் தொடர்ந்து பணிபுரிந்ததாகவும், மேலும் டி2 இருக்கைக்கு வேறு யாரும் பணி அமர்த்தப்படவில்லையென்றும், அதே போன்று டி2 இருக்கையிலிருந்து மாறிச் செல்ல வேண்டுமென்று உயர் அதிகாரிகள் யாரும் தனக்கு அறிவுரை வழங்கவில்லை என்றும் கூறியுள்ளார். மேலும், அவரது எண்ணம் ஊரக வளர்ச்சி இயக்குநரை ஊதாசீனப்படுத்துவதாக இருந்தால் அவர் விடுப்பில் சென்றிருப்பார் என்றும் ஆனால் தனியர் அவ்வாறு செல்லாததால் அலுவலகப்பணி தொய்வின்றி நடக்க ஏதுவாக தொடர்ந்து பணிபுரிந்து வந்துள்ளார் என்றும், அதேபோன்று டி2 இருக்கைக்கு வேறு பணியாளர் யாரும் பணியமர்த்தப்பட்டால் அவர்களிடம் அப்பிரிவிலிருந்து அசல் ஆவணங்களை ஒப்படைப்பதற்காகவும் அப்பிரிவில் தொடர்ந்து இருந்ததாகவும், மேலும் அவர் விரைவில் 9 மாத பயிற்சிக்கு அனுப்பப்பட இருந்ததாகவும், அதனால் தான் தொடர்ந்து டி2 இருக்கையிலேயே பணியாற்றியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதையும் ஏற்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அன்னாருக்கு வழங்கப்பட்ட "கண்டனம்" எனும் தண்டனையை ரத்து செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

தேர்வாணையம் வழக்கின் தன்மையையும் சூழ்நிலையையும் கருத்திற் கொண்டு மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்ய அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

**வழக்கு–2**

அரசாணை (எம்.எஸ்) எண். 2, சிறுதொழில் (EII–1) துறை, நாள் 19.01.2007.

திரு.பி.பெரியநாயகம், முதன்மை பயிற்றுநர், தொழிற் பயிற்சி மையம், கிண்டி (முன்னால் உதவிப் பொறியாளர், மாவட்ட தொழில்மையம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி) என்பவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் நிருபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக அவரை அரசுப் பணியிலிருந்து "பணியறவு" செய்ய உத்தேச முடிவெடித்து அதன்மீதான தேர்வாணையத்தின் கருத்தினைத் தனது 25.7.2005 நாளிட்ட கடிதம் மூலமாக அரசு கோரியது.

தேர்வாணையம் தனது 4.4.2006 நாளிட்ட கடிதத்தில் அரசின் உத்தேச முடிவினை ஏற்று குற்ற அலுவலர் அரசுப் பணியிலிருந்து "பணியறவு" செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு குற்ற அலுவலருக்கு "கட்டாய ஓய்வு" எனும் தண்டனையை வழங்கி அரசாணை (எம்.எஸ்) எண். 2, சிறுதொழில் (EII-1) துறை, நாள் 19.01.2007 ல் ஆணை பிறப்பித்துள்ளது.

தேர்வாணையம் குற்ற அலுவலர் மீது "அரசுப் பணியிலிருந்து பணியறவு" என்னும் தண்டனையை சுமத்தலாம் என ஆலோசனை தெரிவித்திருந்தது. ஆனால் அரசு, தேர்வாணையத்தின் ஆலோசனையை ஏற்காது அதிலிருந்து மாறுபட்டு அரசாணை வெளியிட்டுள்ளது.

**வழக்கு–3**

அரசாணை (ப) எண். 26, த.வ. அ(ம) செய்தி (அ.நி.உ2) துறை, நாள் 25.01.2007.

திரு. அ.தி.பரஞ்சோதி என்பவர் உதவி ஆணையர்/செயல் அலுவலராக அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில், சுவாமிமலையில் பணியாற்றியபோது பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் திருக்கோயில் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தை உயர் அலுவலர்களுக்கு, பல நினைவூட்டுக் கடிதங்களுக்குப் பிறகும் சமர்ப்பிக்காததால் அன்னார் உயர் அலுவலரின் ஆணையை மதிக்காமல் கடமை தவறி செயல்பட்டார் என்று குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு "கண்டனம்" என்னும் தண்டனை விதிக்கப்பட்டது. அத்தண்டனைக்கு எதிராக அன்னார் அரசுக்கு மேல்முறையீடு செய்ததில் அரசு மேல்முறையீட்டின் மீதான தேர்வாணைத்தின் கருத்தை 2005–ல் கோரியிருந்தது. தேர்வாணையம் வழக்கினை ஆய்வு செய்தது. மேல்முறையீட்டாளர் 9.10.2002 தேதிய விவரம் கோரிய குறிப்பாணைக்கு குற்றச்சாட்டு பிறப்பிக்கப்படும் வரையில் பதில் அனுப்பப்படவில்லை என்றும், மேலும் நான்கு நினைவூட்டுகளுக்குப் பின்பும் பதில் அனுப்பப்படவில்லை என்பது ஆவணங்களிலிருந்து தெளிவாகிறது என்றும், மேலும் மேலாளர் மற்றும் வருவாய் பிரிவு எழுத்தர் ஆகியோர் ஓராண்டுக்கு மேலாக முறையான விடுப்பு ஏதுமின்றி பணிக்கு வராமல் இருந்ததால் உரிய காலத்தில் கோரிய தகவலை அனுப்பவில்லை என்று தனது மேல்முறையீட்டில் கூறியிருப்பதை ஏற்றுக் கொள்ள இயலாது என்றும், ஏற்படக்கூடிய கால தாமதத்தைத் தவிர்க்க ஓர் இடைக்கால பதிலையாவது அனுப்பி இருக்கலாம் என்றும், ஆனால் அதுவும் செய்யப்படவில்லை என்றும் கருத்து தெரிவித்து மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை நிராகரிக்க அரசுக்கு தனது 23.1.2006 நாளிட்ட கடிதத்தில் ஆலோசனை வழங்கியது.

ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்துக்கு மாறுபட்டு, மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை ஏற்று, அன்னாருக்கு இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் வழங்கப்பட்ட "கண்டனம்" என்னும் தண்டனையை ரத்து செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

**வழக்கு–4**

அரசு (நிலை) ஆணை எண்.1207, உள் (சிறை–2) துறை, நாள் 18.12.2006.

திரு.எம்.ஜெயக்குமார் (மனுதாரர்) என்பவர் திருச்சி மத்திய சிறையில் இரண்டாம் நிலை காவலராகப் பணி நியமனம் செய்யப்பட்டு வேலூர் காவலர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்று வந்த போது மேலதிகாரியிடம் ஒழுங்கீனமாக நடந்து கொண்டமைக்கு அவர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(ஆ)வின் கீழ் குற்றச்சாட்டு சுமத்தி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவரின் விளக்கம் பெறப்பட்டது. இறுதியில் மனுதாரர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகின்றது என்று முடிவு செய்து நிரூபணமான குற்றச்சாட்டிற்கு தண்டனையாக மனுதாரருக்கு "பணியறவு" என்னும் தண்டனை வழங்கி வேலூர் மத்திய சிறைக் கண்காணிப்பாளரால் ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட தண்டனையை எதிர்த்து சென்னை சரக சிறை துறைத் தலைவருக்கும், அதைத் தொடர்ந்து சென்னை கூடுதல் சிறைத் துறை இயக்குநருக்கும் மனுதாரர் செய்து கொண்ட மேல்முறை/சீராய்வு மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் அன்னார் இறுதியில் அரசுக்கு மனு செய்து கொண்டார். அரசு, 2005ம் ஆண்டு, மேற்கண்ட மனு மற்றும் அது தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைத்து அதன் மீது தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. இவ்வழக்கை தொடர்புடைய ஆவணங்களுடன் பரிசீலனை செய்த தேர்வாணையம், மனுதாரரின் செயல், பயிற்சிக் காவலர் மத்தியில் ஒழுங்கீனத்தை வளர்க்கக் கூடிய கட்டுப்பாட்டை மீறிய செயல் என்பதாலும் சீருடைப் பணியாளர்களுக்குரிய சகிப்புத் தன்மையைச் சீர்குலைக்குக் கூடிய செயல் என்பதாலும் இது மற்றைய காவலர்களையும் தூண்டக் கூடிய செயல் என்பதாலும் இவருக்கு வழங்கப்பட்ட "பணியறவு" தண்டனையை உறுதி செய்து ஆணையிடலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு மேற்கண்ட தேர்வாணையக் கருத்திற்கு மாறுபட்டு மனுதாரருக்கு அளிக்கப்பட்ட "பணியறவு" என்னும் தண்டனையை ரத்து செய்துவிட்டு அவரை மீண்டும் பணியில் சேர்த்தும் "பணியறவு" எனும் தண்டனைக்கு பதிலாக, "ஊதிய உயர்வு ஐந்து வருடங்களுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தம்" என்ற தண்டனை வழங்கியும் ஆணை பிறப்பித்துள்ளது.

மனுதாரர் புரிந்த குற்றத்தின் கடுமையைக் கருத்தில் கொண்டு அவருக்கு வழங்கப்பட்ட "பணியறவு" என்ற தண்டனையை உறுதி செய்ய தேர்வாணையம் ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்துக்களை ஏற்காது அதற்கு மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

**வழக்கு–5**

அரசாணை (டி) எண்.161, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 28.5.2007.

அரசு, நவம்பர் 2005ல் திரு.வி.பகவதிபாண்டி, கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் (ஓய்வு) என்பவரின் மீது, அன்னார் கமுதி கூட்டுறவு நகர வங்கியில் 14.12.1997 முதல் 25.05.2000 வரை கூட்டுறவு சார் பதிவாளர் / மேலாண்மை இயக்குநராகப் பணிபுரிந்த போது அவ்வங்கியில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்த 5 நபர்களுக்கு இவரது பணிக்காலத்தில் முறையற்ற வகையில் 18(1) ஒப்பந்தம் ஏற்படுத்தியது மற்றும் தினக்கூலி பணியாளர்களாக 4 நபர்களைப் பணியமர்த்தியது ஆகிய முறையற்ற நியமனங்களுக்காக தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(ஆ) மற்றும் தமிழ்நாடு ஓய்வூதிய விதி 9ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளில் நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையாக அவரது ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.200/– வீதம் ஆறு மாதங்களுக்குப் பிடித்தம் செய்வது குறித்து தேர்வாணையத்தின் கருத்தினைத் கோரியிருந்தது.

தேர்வாணையம் இவ்வழக்கினை ஆய்வு செய்து நிரூபணமான குற்றச்சாட்டிற்குத் தண்டனையாக மாதம் ரூ.200/– வீதம் ஆறு மாதங்களுக்கு அன்னாரது ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்ய அரசு எடுத்த உத்தேச முடிவு சரியானதுதான் எனக்கருதி அவ்வாறே அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

அரசு, மீண்டும் பிப்ரவரி 2007ல் குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்குகளின் நீதிமன்ற ஆணைகளை அமல்படுத்துவதற்கு ஏதுவாக அன்னாரின் மீதான குற்றச்சாட்டுகளை வலியுறுத்தாமல் கைவிடலாம் என முடிவெடுத்து, தேர்வாணையத்தின் திருத்திய கருத்தினைக் கோரியது.

தேர்வாணையம், தகுதியின் அடிப்படையில் குற்றச்சாட்டுகளைக் கைவிட எந்தக் கருத்தையும் அரசு தெரிவிக்கவில்லை என்றும், ஏற்கனவே தெரிவித்த கருத்தைப் மறுபரிசீலனை செய்வதற்கு சரியான முகாந்திரமில்லை என்றும் கருதி தனது முந்தைய கருத்தையே மீண்டும் வலியுறுத்துவதாக ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு, குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தாக்கல் செய்துள்ள சூழ்நிலையில் தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறுபட்டு அன்னார் மீதான ஒழுங்கு நடவடிக்கையினை வலியுறுத்தாமல் கைவிடலாம் என்று ஆணை பிறப்பித்துள்ளது.

தேர்வாணைய்ம் வழக்கின் தன்மையையும் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு தண்டனை வ்ழங்க அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

<u>வழக்கு–6</u>

அரசாணை (டி) எண்.93, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ) துறை, நாள் 2.3.2007,

திரு.எஸ்.பாலசுப்பிரமணியன் (மேல்முறையீட்டாளர்) என்பவர் திருவள்ளூர் மாவட்டத்தில் திட்ட அலுவலராகப் பணியாற்றிய காலத்தில் சுகாதார வளாகங்களைத் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்யாதது, சுகாதார வளாகங்களுக்குத் தனிப்பட்ட நீர்ஆதாரம் ஏற்படுத்தித் தராமல் குடிநீர் குழாயில் இருந்து இணைப்பு அனுமதி அளித்தது, சுகாதார வளாகங்களைக் கட்டி முடிக்காதது மற்றும் வளாகங்கள் கட்டுதல் குறித்த பணியினை அவ்வப்போது கண்காணிக்காதது போன்ற குறைபாடுகளுக்காக அவர்மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(அ)வின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அன்னாரின் விளக்கம் பெறப்பட்டது. இறுதியில் நிரூபிக்கப்பட்ட குறைபாடுகளுக்காக மேல்முறையீட்டாளருக்கு ஊதிய உயர்வினைத் திரண்ட பயனின்றி ஒரு மாத காலத்திற்கு நிறுத்தம் என்னும் தண்டனை வழங்கி ஊரக வளர்ச்சி இயக்குநரால் ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட தண்டனையை எதிர்த்து மேல்முறையீட்டாளர் அரசுக்கு மேல்முறையீடு செய்து கொண்டார். அரசு, கடந்த 2004–ஆம் ஆண்டு மேற்கண்ட மேல்முறையீடு மற்றும் அது தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைத்து அதன்மீது தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. இவ்வழக்கை தொடர்புடைய ஆவணங்களுடன் பரிசீலனை செய்த தேர்வாணையம் மேல்முறையீட்டாளரின் செயல்பாடுகள் பொறுப்பற்ற முறையில் இருக்கின்றன என்பதையும் கடமை தவறி செயல்பட்டுள்ளார் என்பதையும் கண்டறிந்தது. இந்நிலையில் மேல்முறையீட்டைச் சாரமற்றதாகக்கருதி தள்ளுபடி செய்து ஆணையிடலாம் என அரசுக்குத் தேர்வாணையம் தனது ஆலோசனையை வழங்கியது.

அரசு மேற்கண்ட தேர்வாணைய ஆலோசனையிலிருந்து மாறுபட்டு மேல்முறையீட்டாளருக்கு தண்டனை விதித்து ஊரக வளர்ச்சி இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையைத் தள்ளுபடி செய்தும் மேல்முறையீட்டாளரைக் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்தும் ஆணை பிறப்பித்துள்ளது.

இந்நேர்வில் மேல்முறையீட்டாளர் உண்மையில் பணியில் குறைபாடுகள் புரிந்துள்ளார் என்று கண்டறிந்த நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட "ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி ஒரு மாத காலத்திற்கு நிறுத்தம்" என்ற தண்டனையை உறுதி செய்ய தேர்வாணையம் ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் ஆலோசனையை ஏற்காது, அதற்கு மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

## ஆ. தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாமை :-

அறிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் ஒரு வழக்கில் மாறுபட்டுள்ளது. இதன் விபரம் பின்வருமாறு.-

வழக்கு–1

பொதுப்பணித்துறையிலுள்ள, தமிழ்நாடு பொறியியல் பணியிலடங்கிய உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) எனும் பதவி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் உள்ளதால் அப்பதவிக்கான நியமனங்கள் தேர்வாணையத்தினை கலந்தாலோசித்து செய்யப்பட வேண்டும். ஆதலால் அரசிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) பதவிக்கான 2004–2005–ஆம் ஆண்டிற்கான 14 காலிப்பணியிடங்களின் நியமனத்திற்குரிய தெரிவு 22.05.2006 அன்று நடைபெற்ற துறைப்பதவி உயர்வுக் குழுவின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. மேற்கண்ட பணியிட நியமனத்திற்கு உதவி பொறியாளர்கள் 10 நபர்களும் இளநிலை பொறியாளர்கள் 4 நபர்களும் துறைப்பதவி உயர்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டனர். மேற்கண்ட தெரிவிற்கான துறைப்பதவி உயர்வுக் குழுவிற்கு மாண்புமிகு உறுப்பினர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அவர்கள் தலைவர் மற்றும் செயலர், பொதுப்பணித்துறை, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை செயலாளரின் பிரதிநிதி மற்றும் பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவார்கள். மேற்கண்ட அமர்வாளர்களைக் கொண்ட துறைப்பதவி உயர்வுக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட 10 (பத்து) உதவி பொறியாளர்களில் செல்வி.டோரிஸ் மார்கரட் வரதராஜீலு மற்றும் வி.பாலசுப்ரமணியன் ஆகிய இருவரும் அடங்குவர். இருப்பினும் துறைப்பதவி உயர்வுக்குழுவின் பரிந்துரையினை ஏற்று வெளியிடப்பட்ட அரசாணை(நிலை) எண்.459, பொதுப்பணித்துறை, நாள் 27.10.2006–ல் மேற்கண்ட இருவரின் பெயரும் ஏற்பளிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்படவில்லை. இது குறித்து அரசு தனது விளக்கத்தில் அவர்களுடைய தகுதியினை பிறர் தகுதிகளுடன் ஒப்பு நோக்குகையில் அது குறைவாக காணப்படுவதால் அவர்களின் பெயர் மேற்கண்ட பட்டியலில் சேர்க்கப்படவில்லை என விளக்கம் அளித்தது. எனினும், இக்காரணம் முழுமையானதாக இல்லாததால் அது குறித்து அரசிடம் சரியான விளக்கம் கோரப்பட்டதற்கு அரசு கீழ்க்கண்டவாறு கருத்து தெரிவித்தது.

"2004–2005 ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) பதவிக்கான பட்டியலுக்கு பரிந்துரைக்கப்பட்ட 10 உதவிப்பொறியாளர்களின் (தனியாளர்) மந்தனக் கோப்பில் கண்டுள்ள கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான பதிவுகளை சரிபார்த்ததில் அவர்களில் 8 நபர்களின் தரம் நன்று, மிக நன்று மற்றும் தலைசிறந்தது என அறியப்பட்டது. ஆனால் செல்வி.டோரிஸ் மார்கரட் வரதராஜீலு மற்றும் வி.பாலசுப்ரமணியன் ஆகியோரின் பதிவுகளை சரிபார்த்ததில் அவற்றில் சில காலங்களுக்கு சாராசரி தரம் பதிவுசெய்யப்பட்டுள்ளது தெரியவந்தது. ஆதலால் இவர்களின் தரத்தினை மற்ற பரிந்துரைக்கப்பட்ட நபர்களுடன் ஒப்பு நோக்குகையில் அது குறைந்து காணப்படுகிறது. தனியாளருக்கு பதவி உயர்வு அளிக்கப்படும் நேர்வில் அனைத்து தன்மைகளும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்பதால் மேற்கண்ட இரு நபர்களும் துறைப் பதவி உயர்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட போதிலும், அவர்களது தர ஒப்புகை குறைந்து காணப்பட்டதால், தலைமைச் செயலக செயல்பாடு அறிவுரை 95–ன் படி மேற்கண்ட இருவரின் பெயர்களும் உதவி செயற்பொறியாளர் பட்டியலில் சேர்க்கப்படாமல் ஏனையோருக்கு அரசாணை எண். 459, பொதுப்பணித்துறை, நாள் 27.10.2006 – ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

எனவே, மேற்குறிப்பிட்ட காரணத்தால் செல்வி.டோரிஸ் மாா்கரட் வரதராஜீலு மற்றும் வி.பாலசுப்ரமணியன் ஆகியோருடைய பெயர்கள் 2004–2005–ஆம் ஆண்டு பட்டியலில் சேர்க்கப்படவில்லை".

2004–2005–ஆம் ஆண்டிற்கான பட்டியலுக்கான சரிபார்ப்பு காலம் (அறுதி நாளுக்கு முந்தைய 5 ஆண்டுகளுக்கான காலம்) 01.04.1999 முதல் 31.03.2004 வரை ஆகும். செல்வி.டோரிஸ் மார்கரட் வரதராஜீலுவிற்கான தனியாளர் படிவத்தில் 01.04.2003 முதல் 31.03.2004 வரையிலான காலத்திற்கு சாரசரி தரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. பாலசுப்ரமணியனுக்கான தனியாளர் படிவத்தில் 01.04.1999 முதல் 31.03.2000 வரையிலும், 11.12.2000 முதல் 31.03.2001 வரையிலும் மற்றும் 03.01.2003 முதல் 31.03.2003 வரையிலும் உள்ள காலத்திற்கு சராசரியான தரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பொதுவாக தெரிவின் போது சராசரி தரம் தனியாளருக்கு எதிராக கணக்கில் கொள்ளப்படுவதில்லை. குறை குறிப்புரைகள் மட்டுமே தனியாளருக்கு எதிராக கணக்கில் கொள்ளப்படுகிறது. இருப்பினும் அக்குறை குறிப்பிரைகள்பற்றிய விவரம் தனியாளருக்கு தெரிவிக்கப்பட்டு அதற்கான ஒப்புகை பெறப்பட்டிருக்க வேண்டும். இந்நேர்வில் மேற்குறிப்பிட்ட சராசரியான தரம் மேற்படி தனியாளர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. இது சராசரி தரம் தனியாளர்களுக்கு எதிராக கணக்கில் கொள்ளப்படுவதில்லை என்ற காரணத்திற்காக இருக்கலாம். மேலும், மேற்படி தனியாளர்களை 2004-2005 ஆம் ஆண்டு பட்டியலுக்கு பரிந்துரை செய்யும் போது துறைப்பதவி உயர்வுக்குழு அமர்வாளர்களான செயலர், பொதுப்பணித்துறை, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை செயலாளரின் பிரதிநிதி மற்றும் பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் ஆகியோரால் மேற்படி இருவரின் தெரிவு குறித்து மறுப்பு ஏதும் தெரிவிக்கப்படவில்லை. எனவே, அதன் அடிப்படையிலேயே மேற்படி தனியாளர்கள் மேற்படி பட்டியலில் சேர்க்க தகுதியானவர்கள் என்று பரிந்துரை செய்யப்பட்டது. தவிரவும் இதே துறைப் பதவி உயர்வுக்குழுவால் இதே அமர்வாளர்களைக் கொண்டு இதே நாளில் தேர்வு மேற்கொள்ளப்பட்ட உதவி செயற்பொறியாளர் (சிவில்) பதவிக்கான தெரிவில் தனியாளர் படிவத்தில் சராசரி தரம் குறிப்பிடப்பட்டிருந்த சிலர் பட்டியலில் சேர்க்க பரிந்துரைக்கப்பட்டு, அப்பரிந்துரை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசாணை 3(D), எண்.28, பொதுப்பணித்துறை, நாள் 22.06.2006-ல் வெளியிடப்பட்டிருக்கிறது.

அரசு, மேற்படி தனியாளர்களின் பெயரினை 2004-2005 ஆம் ஆண்டுக்கான பரிந்துரை பட்டியலிலிருந்து ஒரு சில காரணங்களுக்காக நீக்கி அரசாணை வெளியிட உத்தேசிக்கும் பட்சத்தில் முன்னதாகவே தகுந்த காரணங்களை தெரிவித்து தேர்வாணையத்தின் இசைவினை பெற்று மேற்கண்ட பட்டியலிலிருந்து அவர்களது பெயரினை நீக்கி இருக்கலாம். ஆகவே, இது குறித்து சரியான விளக்கம் அளிக்கக் கோரிய போது, தலைமைச் செயலக செயல்பாடு விதிகளின் அறிவுரை 95-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மேற்கண்ட இருநபர்களின் பெயர்கள் மேற்கண்ட பட்டியலிருந்து நீக்கப்பட்டுள்ளது என்று அரசு தெரிவித்துள்ள காரணங்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கவைகள் அல்ல. தலைமைச் செயலக செயல்பாடு விதிகள் அறிவுரை 95-ல் கண்டுள்ளபடி தேர்வாணையத்தின் பரிந்துரை ஏற்கப்படாத நேர்வில் அது குறித்து தேர்வாணையம் தனது கருத்தினை அளிக்க வாய்ப்பளிக்கப்பட்டு அதன் பின்னரே ஆணை வெளியிடப்பட வேண்டும். ஆனால், இந்நேர்வில் தேர்வாணையத்தின் கருத்து பெறப்படாமலேயே செல்வி.டோரிஸ் மார்கரட் வரதராஜீலு மற்றும் திரு.வி.பாலசுப்ரமணியன் ஆகியோரின் பெயர்கள் 2004-2005 ஆம் ஆண்டு பட்டியலிலிருந்து சேர்க்கப்படாமல் நீக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், இது குறித்து தலைமைச் செயலக செயல்பாடு விதிகளின் அறிவுரை 95-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தவிரவும், செல்வி.டோரிஸ் மார்கரட் வரதராஜீலுவை உதவி செயற்பொறியாளர் பதவிக்கான 2002-2003 ஆம் ஆண்டுக்கான பட்டியலில் சேர்க்க அரசு பரிந்துரை செய்தது. அரசின் பரிந்துரையின் அடிப்படையில் அவரது பெயரினை 2002-2003 ஆம் ஆண்டிற்கான பட்டியலில் சேர்க்க தேர்வாணையம் தனது இசைவினை மார்ச் 2006-ல் அளித்தது. ஆனால் இது குறித்து அரசாணை இதுவரை வெளியிடப்படவில்லை.

துறைப்பதவி உயர்வுக்குழு கூட்டத்தில், செயலர் பொதுப்பணித்துறை, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை செயலரின் பிரதிநிதி மற்றும் பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் ஆகியோர் கலந்து கொண்டு ஆழ்ந்தாராய்வு செய்து மேற்கூறிய இருவரின் பெயர்களை உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) பதவிக்கான 2004-2005 ஆம் ஆண்டு பட்டியலுக்கு பரிந்துரை செய்த போதிலும், தற்போது அரசு மேற்படி தனியாளர்களின் பெயரினை மேற்கண்ட பட்டியலில் இருந்து நீக்கி துறைப்பதவி உயர்வுக் குழுவின் பரிந்துரைக்கு மாறாக அரசாணை வெளியிட்டுள்ளது.

அரசு, இவ்வாறாக இந்நேர்வில் தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக ஆணை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் கொள்கை சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தாலொழிய ஏனையவற்றில் தேர்வாணையத்தின் கருத்துரை ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என்ற மரபினை அரசு மீறியுள்ளது.

**இ. அரசின் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர பொதுவாகத் தேர்வாணையத்தின் ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற மரபினை விட்டு விலகி அரசு ஆணையிட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுவதோடு எதிர் காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. இப்பொருள் குறித்து ஐந்து ஆண்டு புள்ளி விவரம் பின் இணைப்பு-12 ல் கொடுக்கப்பட்டுள்ளது.**

**ஏற்புரை:-**

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்கு போதிய இட வசதி செய்து கொடுத்து மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்டத் தேர்வுகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் தேர்வாணையத்தின் அழைப்பினை உடனடியாக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பாராமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்கள் மற்றும் ஆலோசனை வழங்கிய வல்லுநர்கள் ஆகியோருக்கு இத்தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரியவேட்பாளர்களை பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்டுள்ள துறைத்தேர்வு குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு அரசுத்துறை செயலாளர்களுக்கும், துறைத்தலைவர்களுக்கும் தேர்வாணையம் தன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

முடிவாக, ஆண்டு முழுவதும் உண்மையாகவும் மற்றும் திறமையாகவும் பணிபுரிந்த அதனுடைய ஊழியர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறது.

| | |
|---|---|
| **திரு. ஆ.மு.காசிவிசுவநாதன், இ.ஆ.ப. (ஓய்வு)** | **தலைவர்** |
| **திருமதி.பா. நீலாம்பிகை, எம்.ஏ., பி.எல்.,** | **உறுப்பினர்** |
| **திருமதி. நீ.கு. கலைச்செல்வி, பி.எஸ்.சி., பி.எல்.,** | **உறுப்பினர்** |
| **பேராசிரியர். ஆர். சுப்பிரமணியன், பி.எஸ்.சி., எம்.எல்.,** | **உறுப்பினர்** |
| **திரு. பெ. தீர்த்தாரப்பன், பி.எஸ்.சி., பி.டி.,** | **உறுப்பினர்** |
| **திரு. இரா. செங்குட்டுவன், பி.இ., பி.ஜி.டி.எம்.,** | **உறுப்பினர்** |
| **திருமதி. சி.டி. திலகவதி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.ஜி.டி.ஜே.எம்.சி.,** | **உறுப்பினர்** |
| **டாக்டர். ரெ. நாராயணசாமி, எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி.,** | **உறுப்பினர்** |
| **திரு. மு. இராமசாமி, எம்.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்.,** | **உறுப்பினர்** |
| **திரு. த. சங்கரலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,** | **உறுப்பினர்** |
| **டாக்டர்.கி.லெட்சுமணன், எம்.காம் ஏ.சி.எஸ்(இண்டர்) எம்.பில்., பிஎச்.டி..,** | **உறுப்பினர்** |
| **திருமதி.மா.சோபினி, எம்.ஏ.,** | **உறுப்பினர்** |
| **திரு.முகமதுஅலி ஜின்னா பி.இ.,** | **உறுப்பினர்** |
| **டாக்டர். சேவியர் ஜேசு இராஜா எம்.எஸ்.சி., எம்.பில்., பிஎச்.டி..,** | **உறுப்பினர்** |
| **டாக்டர்.கே.மு.இரவி, பிஎச்.டி..,** | **உறுப்பினர்** |

தமிழ்நாடு அரசுப் பணியாளர்
தேர்வாணையம். சென்னை-2.

நாள் :03.01.2009

ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப.,
செயலாளர்

## பின் இணைப்பு - 1

### 31.3.2008- இல் உள்ளபடி தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | இணைச் செயலாளர் | 1 |
| 2 | துணைச் செயலாளர் | 3 |
| 3. | சார் செயலாளர் | 20 |
| 4. | கணக்கு அலுவலர் | 1 |
| 5. | உதவி கணக்குஅலுவலர் | 1 |
| 6. | ஆராய்ச்சி அலுவலர் | 1 |
| 7. | நூலகர் | 1 |
| 8. | முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர் | 1 |
| 9. | பிரிவு அலுவலர் | 72 |
| 10. | நேர்முக செயலாளர் | 1 |
| 11. | உள்ளீடு விளையளவு மேற்பார்வையாளர் (கணிப்பொறி) | 1 |
| 12. | உள்ளீடு விளையளவு இயக்குபவர் (கணிப்பொறி) | 1 |
| 13. | அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர் (கணிப்பொறி) | 8 |
| 14. | உதவி பிரிவுஅலுவலர் மற்றும் கணக்கர் | 194 |
| 15. | நேர்முக உதவியாளர் | 7 |
| 16. | நேர்முக எழுத்தர் | 4 |
| 17. | தொலைபேசி இயக்குபவர் | 2 |
| 18. | உதவியாளர் | 99 |
| 19. | தட்டச்சர் | 39 |
| 20. | ஊர்தி ஓட்டுநர் | 14 |
| 21. | பதிவுரு எழுத்தர் மற்றும் பதிவுரு உதவியாளர் | 23 |
| 22. | மின் தூக்கி இயக்குபவர் | 1 |
| 23. | முதன்மை ஏவலர் | 1 |
| 24. | அலுவலக உதவியாளர் | 77 |
| 25. | காவலர் | 6 |
| 26. | பெருக்குபவர் | 4 |
| 27. | துப்புரவுப்பணியாளர் | 3 |
| 28. | குடிநீர் வைப்பவர் | 1 |

# பின் இணைப்பு - II

## நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட பதவிகளின் விவரம் - 2007-2008 ஆம் ஆண்டு

| வரிசை எண் | பதவி, துறை மற்றும் பணியின் பெயர் | விண்ணப்பம் பெற கடைசி நாள் | தெரிவு முடிவுகள் தெரிவிக்கப்பட்ட நாள் | காலியிடங்களின் எண்ணிக்கை | | | | | | பெறப்பட்ட விண்ணப்பங்கள் | முதனிலைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள் | முதன்மைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள் | வாய்மொழித் தேர்வில் கலந்து கொண்டவர்கள் | | | | | | இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் | | | | | | தெரிவு செய்யப்பட்டவர்களின் கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ப.வ | ப.கு | மி.பி.வ | பி.வ | பொது | கூடுதல் | | | | ப.வ | ப.கு | மி.பி.வ | பி.வ | பொது | கூடுதல் | ப.வ | ப.கு | மி.பி.வ | பி.வ | பொது | கூடுதல் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) |
| 17. | திரு. வி.ஆர். நாகராஜன், பி.ஏ., பி.எல், | 20.03 1958 | 19 01 1964 |
| 18. | திரு. ஏ.எம். அல்லா பிச்சை | 08 07.1959 | |
| 19. | திரு. எஸ். சின்னப்பன், பி.ஏ., பி.எல்., | 07.09.1963 | 07.01 1968 |
| 20 | திரு. வி கே. அப்பாண்ட ராஜன், இ.ஆ ப, (ஓய்வு) | 04.05 1966 | |
| 21. | திரு கே. இராஜசேகரன், பி.ஏ.,பி.எல்., | 20.06.1968 | 12 07.1971 |
| 22 | திரு எச். சையத் இப்ராகிம், எம்.ஏ., பி.எல்., | 24.06.1968 | |
| 23. | திரு. எஸ். எம். காமாலுதின் | 08 01.1972 | 13 03 1975 |
| 24. | டாக்டர். பி.எஸ். குமாரவேலு, எம்.பி.பி.எஸ்., | 18.04 1972 | 30 06 1974 |
| 25. | திரு. சி. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப., (ஓய்வு) | 19.04.1972 | 11 03 1975 |
| 26. | திரு. ஏ. பழனிச்சாமி, பி.ஏ., எம்.ஏல்., | 26 06.1974 | 10 08 1978 |
| 27. | திரு கே. பாண்டுரங்கன், பி.ஏ.பி.எல். | 10.04.1974 | 09.04.1980 |
| 28. | திரு. பி. சங்கரன், இ.ஆ.ப., (ஓய்வு) | 01.07.1974 | 30.06.1980 |
| 29. | திரு. எஸ். சீனிவாசன், பி.ஏ.பி.எல்., | 12 03.1975 | 11.03.1981 |
| 30. | திரு. எஸ்.எம். சுலைமான், இ.ஆ.ப., (ஓய்வு) | 14.03.1975 | 14.03.1981 |
| 31. | திரு. எம். திருமலைசாமி, இ.ஆ.ப., (ஓய்வு) | 21.10.1978 | 11.08.1984 |
| 32. | திரு. எம். பெரியசாமி, இ.ஆ.ப., (ஓய்வு) | 02.11.1978 | 01.11.1984 |
| 33. | டாக்டர். திருமதி. அம்பிகா சண்முகம், எம்.பி.பி.எஸ்., எம்.டி., | 30.06.1980 | 31.03.1984 |

| வரிசை எண் | தேர்வாணைய உறுப்பினர்களின் பெயர் | பணிபுரிந்த காலம் | |
|---|---|---|---|
| | | முதல் | வரை |
| 34. | திரு. சி. ஜி. திருமால், இ.ஆ.ப., (ஓய்வு) | 07.10.1980 | 03.08.1985 |
| 35. | திரு. எஸ். திருமலையப்பன், இ.ஆ.ப., (ஓய்வு) | 04.04.1981 | 06.05.1986 |
| 36. | திரு. எம். அப்துல் சமத், பி.இ., எஃப்.ஐ.இ., | 04.04.1981 | 23.05.1984 |
| 37. | திரு. எம்.எஸ். அப்துல் காதர், பி.எஸ்.சி., | 10.08.1984 | 10.08.1990 |
| 38. | திரு. ஓ. ஏ. கனகசபை, பி.ஏ., பி.டி., பி.எல்., | 10.08.1984 | 29 06.1990 |
| 39. | திரு ஏ. பொன்னம்பலம், பி.எஸ்.சி,. (பொறி) | 13.08.1984 | 29.04.1989 |
| 40. | திரு. பி. சுப்பராயன், எம்.ஏ., | 06.03.1985 | 21.05.1989 |
| 41. | திரு பி.எல்., பொன்னுசாமி, இ.ஆ.ப., (ஓய்வு) | 18.12.1985 | 17.12.1991 |
| 42. | திரு. ஆர். பொன்னுசாமி, பி.ஏ., | 12.03.1986 | 17.08,1989 |
| 43. | திரு. யு.எஸ். நடராஜன், இ.ஆ.ப., (ஓய்வு) | 03 03.1987 | 18.06.1992 |
| 44. | திரு. சு. நாகேஸ்வரன், பி.,இ., எஃப்.ஐ.இ., | 25.06.1989 | 16.01.1993 |
| 45 | திரு கா பொன்னுசாமி, இ.ஆ.ப., (ஓய்வு) | 29.06.1989 | 30 06.1993 |
| 46. | டாக்டர் ஐ. எஸ். சண்முகம், எம்.பி.பி.எஸ்., டி. ஆர்த்தோ., டி.பி.எச்ஓய்.எஸ்., எம் &பி., (லண்டன்) எப்.எம்.எம்.சி | 30.06.1989 | 24.04.1991 |
| 47. | திரு. ஜே இராமலிங்கம், பி.இ., | 30.06.1989 | 10.04 1994 |
| 48. | திரு. வி. குருமூர்த்தி, பி.,இ , ஏஃப்.ஐ.இ., | 01.07.1989 | 01.05.1993 |
| 49. | திரு. டி. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்., | 05.07.1989 | 27.08.1991 |
| 50. | திரு. எஸ். ஹமீது, எம்.ஏ., | 24.10.1990 | 14.07.1995 |
| 51. | திரு. ஜி. செல்வகணபதி, எம்.ஏ., | 27.11.1990 | 15.09.1995 |
| 52. | டாக்டர். திருமதி. கே. நாயகம், எம்.ஏ., பி.எச்.டி., | 05.12 1990 | 04.12.1996 |
| 53 | திரு. எஸ்.டி. காசி ராஜன். இ.ஆ.ப., (ஓய்வு) | 15.07.1991 | 12.08.1992 |
| 54. | டாக்டர். எம்.எஸ். இராமச்சந்திரன், எம்.பி.பி.எஸ்., எம்.டி., | 17.12.1991 | 05.10.1995 |
| 55. | திரு. சி. செல்லப்பன், இ.ஆ.ப., (ஓய்வு) | 30.04.1992 | 14.05.1996 |
| 56. | திரு. ஆர் வேலு, இ.ஆ.ப., (ஓய்வு) | 15.07.1996 | 14.07.2002 |
| 57. | திரு. ஆர். குருசாமி, பி.ஏ., பி.எல்., | 24 07.1996 | 14.07.2002 |
| 58. | திரு. ஜி. அரங்கநாதன், எம்.ஏ எம்.பில்., | 15.07.1996 | 14.07.2002 |
| 59. | டாக்டர். எஸ் பாலசுப்பிரமணியன், எம்.ஏ., பிஎச்.டி., டி.எஸ்.எஸ்., | 17.07.1996 | 16 06.2002 |
| 60 | திரு. எம். நாகூர்மீரான், பி.எஸ்.சி. பி.எல்., | 15.07.1996 | 25.06.2001 |
| 61. | டாக்டர். திருமதி ஜோதிபாய் செல்வின்ராஜ்., எம்.எஸ்.சி. பிஎச்.டி., | 15.07.1996 | 28.03.2002 |
| 62. | திரு. ஆர். சுந்தரம், பி.ஏ., பி.எல்., | 20.01.1997 | 10.03.2001 |
| 63. | திரு. எம். மணி., இ.கா.ப., (ஓய்வு) | 22.01. 1997 | 21.01.2003 |
| 64. | திரு. சு. சம்பந்தம், எம்.ஏ., பி.எல்., | 17.07.2000 | 29.03.2001 பதவியிலிருந்து விலகிவிட்டார் |
| 65. | திரு. வ அழகுசுந்தரம், எம்.எஸ்.சி., | 21.07.2000 | 23.11.2004 |
| 66. | டாக்டர். இரா. பெருமாள்சாமி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., | 27.03.2001 | 26.03.2007 |
| 67. | டாக்டர். திருமதி, கு.ம. இராமாத்தாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., | 21.03.2001 | 31.01.2007 |

| வரிசை எண் | தேர்வாணைய உறுப்பினர்களின் பெயர் | பணிபுரிந்த காலம் | |
|---|---|---|---|
| | | முதல் | வரை |
| 68. | திரு. இரா. தமிழ்மணி, பி.ஏ. பி.எல்., | 30.03.2001 | 19.10.2004 |
| 69. | திரு. அ. நவநீதகிருஷ்ணன், பி.எஸ்.சி. பி.எல்., | 16.06.2004 | 24 3 2008 பதவியில் இருந்து விலகி விட்டார |
| 70. | திருமதி. பா.நீலாம்பிகை, எம்.ஏ., பி.எல்., | 16.06.2004 | பதவியில் தொடர்ந்து உள்ளார |
| 71. | திருமதி. நீ.கு. கலைச்செல்வி, பி.எஸ்.சி., பி.எல்., | 16.06.2004 | பதவியில தொடர்ந்து உள்ளார் |
| 72. | பேராசிரியர். ஆர். சுப்பிரமணியன். பி.எஸ்.சி., எம்.எல்., | 25.08.2004 | பதவியில தொடர்ந்து உள்ளார் |
| 73. | திரு. பெ. தீர்த்தாரப்பன், பி.எஸ்.சி., பி.டி, | 25.08.2004 | பதவியில தொடாநது உளளார் |
| 74. | திரு. இரா. செங்குட்டுவன், பி.இ., பி.ஜி.டி.எம்., | 23.08.2004 | பதவியில தொடாநது உளளார் |
| 75 | திருமதி. சி.டி. திலகவதி, எம். ஏ., எம்.எட்., எம்.பில், பி.ஜி.டி.ஜே,எம்.சி., | 25.08.2004 | பதவியில் தொடர்ந்து உள்ளார |
| 76. | டாக்டர் ரெ. நாராயணசாமி, ஏம்.ஏ., பிஎச்.டி., | 10.12.2004 | பதவியில் தொடாந்து உள்ளார் |
| 77. | திரு. மு. இராமசாமி, எம்.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்., | 19.05.2006 | பதவியில் தொடர்நது உள்ளார் |
| 78. | திரு.த.சங்கரலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்., | 14.07.2007 | பதவியில தொடர்ந்து உளளார் |
| 79. | டாக்டர்.கி.லெட்சுமணன், எம்.காம் ஏ.சி.எஸ்(இண்டர்) எம்.பில்., பிஎச்.டி., | 06.07.2007 | பதவியில் தொடர்நது உள்ளார் |
| 80. | திருமதி.மா.சோபினி, எம்.ஏ., | 02.07.2007 | பதவியில் தொடாந்து உள்ளார் |
| 81. | திரு.முகமதுஅலி ஜின்னா, பி.இ., | 02.07.2007 | பதவியில தொடாந்து உள்ளார |
| 82. | டாக்டர் .சேவியர் ஜேசு இராஜா, எம்.எஸ்.சி., எம்.பில்., பிஎச்.டி.., | 02.07 2007 | பதவியில் தொடர்நது உளளார் |
| 83. | டாக்டர்.கே.மு.இரவி, பிஎச்.டி.., | 29.03.2008 | பதவியில் தொடர்நது உளளார் |

## பின் இணைப்பு - 12

## (தொடர்பு பகுதி - ~~7~~ 6

தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து அரசு மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை- கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான விவரங்கள்

| வரிசை எண் | ஆண்டு | தேர்வாணையத்தின் கருத்தில் இருந்து மாறுப்பட்ட வழக்குகள் | தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்படாத வழக்குகள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 2003 – 2004 | 9 | 3 |
| 2 | 2004 – 2005 | 2 | 3 |
| 3 | 2005 – 2006 | 3 | 1 |
| 4 | 2006 – 2007 | 4 | - |
| 5 | 2007 - 2008 | 6 | 1 |

# ANNEXURE - XIII / பின்இணைப்பு - XIII

## DETAILS OF POSTS NOTIFIED AND VACANCIES IN THE LAST FIVE YEARS PERIOD
## கடந்த ஐந்து ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் காலியிடங்களின் விவரம்

**NOTIFICATION**




**VACANCIES**




## NUMBER OF CANDIDATES SELECTED AND RECOMMENDED FOR APPOINTMENTS IN THE LAST FIVE YEARS PERIOD
## கடந்த ஐந்து ஆண்டுகளில் தெரிவு பெற்று பணி நியமனத்திற்காக பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை விவரம்




## WRITTEN EXAMINATIONS CONDUCTED IN THE LAST FIVE YEARS PERIOD
## கடந்த ஐந்து ஆண்டுகளில் நடத்தப்பட்ட எழுத்துத் தேர்வுகளின் எண்ணிக்கை விவரம்



# ANNEXURE - XIII / பின்இணைப்பு - XIII

## NUMBER OF CANDIDATES RECOMMENDED FOR APPOINTMENT BY RECRUITMENT THROUGH TRANSFER/PROMOTION IN THE LAST FIVE YEARS
## கடந்த ஐந்து ஆண்டுகளில் பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் பணி நியமனம் பெற பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை விவரம்




## DETAILS OF DISCIPLINARY CASES DISPOSED IN THE LAST FIVE YEARS PERIOD
## கடந்த ஐந்து ஆண்டுகளில் தீர்வு செய்யப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் எண்ணிக்கை விவரம்




## DETAILS OF ORAL TEST HELD IN THE LAST FIVE YEARS PERIOD
## கடந்த ஐந்து ஆண்டுகளில் நடத்தப்பட்ட வாய்மொழித் தேர்வுகளின் விவரம்



சுருக்கம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – ஆண்டறிக்கை 2007–2008 – பதிவு செய்யப்பட்டது.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை

அரசாணை (நிலை) எண். 33 நாள் : 23-03-2009

பங்குனி 10,
திருவள்ளுவர் ஆண்டு 2040.

படிக்கப்பட்டது :

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
கடித எண். 554 /ஆர் & டி/ 2008, நாள் 09.01. 2009.

*******

ஆணை :

பதிவு செய்யப்பட்டது

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.எஸ். ஸ்ரீபதி
அரசு தலைமைச் செயலாளர்

பெறுநர்
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
அனைத்து செயலகத் துறைகள், சென்னை–9.
புள்ளியியல் மற்றும் பொருளாதார ஆணையர், சென்னை–6.
நூலகர், நாடாளுமன்ற நூலகம், இந்திய அரசு, புதுதில்லி (2 படிகள்).
நூலகர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9 ( 3 படிகள்).
நூலகர், மைய அரசு தலைமைச் செயலக நூலகம், புதுதில்லி (2 படிகள்)
இந்திய அரசு உள் விவகாரங்கள் அமைச்சகம், புதுதில்லி (மேல் கடிதத்துடன்).
இந்திய அரசு துணைச் செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை,
அமைச்சரவைச் செயலகம், புதுதில்லி.

/த.பி.பா./

தொடர்ச்சி ....

பொறுப்பிலுள்ள அலுவலர், தகவல் மையம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
இந்திய ஆட்சிப் பணி அலுவலர் கல்லூரி, சிம்லா.
தேசிய நூலகம், கொல்கத்தா.
கன்னிமாரா பொது நூலகம், சென்னை–8.
மத்திய நூலகம், டவுன் ஹால், மும்பை.
பிற்படுத்தப்பட்டோர் நல மண்டல இயக்குநர், தென்மண்டலம், சாஸ்திரிபவன், சென்னை–6 (3 படிகள்).
இயக்குநர், இந்திய ஆவணக் காப்பகம், ஜன்பத், புதுதில்லி ( 3 படிகள்).
மத்திய அரசு உள்துறை விவகாரங்களின் அமைச்சகம், மனித சக்தி இயக்ககம், புதுதில்லி (2 படிகள்)
நூலக மற்றும் மேற்கோள் அலுவலர், இந்திய பொது நிர்வாகக் கழகம், இந்திர பிரஸ்தா தோட்டம், ரிங் சாலை, புதுதில்லி
இயக்குநர், தேசிய நிர்வாகக் குழு, சார்லிவில்லி, முசௌரி.
உள்துறை விவகாரங்களின் அமைச்சகத்தின் நூலகம், தெற்கு கட்டடத் தொகுதி, புதுதில்லி (2 படிகள்).
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
பொறுப்பிலுள்ள அலுவலர், தகவல் மையம், மதுரை.
இயக்குநர், ஐக்கிய நாடுகளின் நூலகத்தின் கூட்டமைப்பு அலுவலகம், எண்.11, புதுதில்லி தெற்கு விரிவாக்கம், தொகுதி 1, புதுதில்லி –49. (6 படிகள்)
நூலகர், தலைமைச் செயலக நூலகம், சென்னை–9.
ஆணையர், ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை–8.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை–22.
மின்சாரத் துறை அமைச்சரின் சிறப்புநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், மத்திய தேர்வாணையக் குழு, புதுதில்லி .
செயலாளர், பிற மாநிலங்களின் அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள்.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தச் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தச் (நி.சீ. II )துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பா. திருஞானசம்பந்தம் (signature)
பிரிவு அலுவலர் 25/03/09
25.03.09

**<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 2007–2008ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் 6–ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு முடிவெடுத்ததற்கான விளக்கக் குறிப்பு</u>**

**<u>இனம் –1</u>**

டிசம்பர் 2006ல் அரசு, திரு ஜே.எம். மனோகர், விரிவாக்க அலுவலர் (கணக்குகள்) என்பவருக்கு வழங்கப்பட்ட ''கண்டனம்'' எனும் தண்டனையை எதிர்த்து, அன்னார் அரசுக்கு அளித்த மேல்முறையீட்டின் மீது தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

2. தேர்வாணையம் இவ்வழக்கினை ஆய்வு செய்து, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களின் கண்டறிந்த முடிவும், அவர் மீது குற்றச்சாட்டுகளுக்கு அளிக்கப்பட்ட ''கண்டனம்'' என்னும் தண்டனை குறைந்த பட்சமே என்பதாலும், இந்த வழக்கில் வழங்கப்பட்ட தண்டனை ஆணையில் குறுக்கீடு தேவையில்லை என்று தேர்வாணையம் கருதியதால், மேல் முறையீட்டாளர், மேல்முறையீட்டில் கருதப்படத்தக்க வகையில் புதியதாக முகாந்திரங்கள் ஏதும் சமர்ப்பிக்காததால் அம்மேல்முறையீட்டை சாரமற்றதாகக் கருதி தள்ளுபடி செய்யலாம் எனக் கருதி அவ்வாறே தனது ஆலோசனையை அரசுக்கு வழங்கியது.

3. ஆனால், அரசு, மேல்முறையீட்டாளர் தனது மேல்முறையீட்டில், தனக்கு ஒரு வருட காலத்திற்குள் இருமுறை பணிமாற்றம் செய்யப்பட்டது என்றும், மேலும் தான் டி2 இருக்கையிலிருந்து ''இந்திரா நினைவுக் குடியிருப்பு'' பிரிவிற்கு பணிமாற்றம் செய்யப்பட்டபோது, அம்மாறுதல் ஆணையை மறு பரிசீலனை செய்யச் சொல்லி ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு மனு அளித்து, அம்மனு ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஆய்வில் உள்ளது என்ற எண்ணத்தில் டி2 இருக்கையில் தொடர்ந்து பணிபுரிந்ததாகவும், மேலும் டி2 இருக்கைக்கு வேறு யாரும் பணி அமர்த்தப்படவில்லையென்றும், அதே போன்று டி2 இருக்கையிலிருந்து மாறிச் செல்ல வேண்டுமென்று உயர் அதிகாரிகள் யாரும் தனக்கு அறிவுரை வழங்கவில்லை என்றும் கூறியுள்ளார். மேலும், அவரது எண்ணம் ஊரக வளர்ச்சி இயக்குநரை உதாசீனப்படுத்துவதாக இருந்தால், அவர் விடுப்பில் சென்றிருப்பார் என்றும், ஆனால் தனியர் அவ்வாறு செல்லாததால் அலுவலகப்பணி தொய்வின்றி நடக்க ஏதுவாக தொடர்ந்து பணிபுரிந்து வந்துள்ளார் என்றும், அதேபோன்று டி2 இருக்கைக்கு வேறு பணியாளர் யாரும் பணியமர்த்தப்பட்டால், அவர்களிடம் அப்பிரிவிலிருந்து அசல் ஆவணங்களை ஒப்படைப்பதற்காக அப்பிரிவில் தொடர்ந்து இருந்ததாகவும், மேலும் அவர்

விரைவில் 9 மாத பயிற்சிக்கு அனுப்பப்பட இருந்ததாகவும், அதனால்தான் தொடர்ந்து டி2 இருக்கையிலேயே பணியாற்றியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு, அன்னாருக்கு வழங்கப்பட்ட "கண்டனம்" எனும் தண்டனையை ரத்து செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

4. தேர்வாணையம் வழக்கின் தன்மையையும், சூழ்நிலையையும் கருத்திற் கொண்டு மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்ய அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால், அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

<u>தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு முடிவெடுத்ததற்கான காரணங்கள்:-</u>

மேல்முறையீட்டாளர் திரு ஜே.எம். மனோகர், விரிவாக்க அலுவலர் (கணக்குகள்) அவர்களுக்கு ஒரு வருட காலத்திற்குள் இருமுறை பணி மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், டி2 இருக்கையிலிருந்து "இந்திரா நினைவுக்குடியிருப்பு" பிரிவிற்கு அவரை மாற்றம் செய்த போது, அம்மாறுதல் ஆணையை மறுபரிசீலனை செய்யச் சொல்லி, ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு மனு அளித்து, அம்மனு ஆய்வில் இருந்ததால்தான் டி2 இருக்கையிலேயே தொடர்ந்து பணிபுரிந்துள்ளார். அதே போன்று, டி2 இருக்கைக்கு வேறு யாரும் பணி அமர்த்தப்படவில்லை. மேலும், மேல்முறையீட்டாளர் டி2 இருக்கையிலிருந்து மாறிச் செல்ல வேண்டுமென உயர் அதிகாரிகள் யாரும் அறிவுரை வழங்கவில்லை. ஊரக வளர்ச்சி இயக்குநரை உதாசீனப்படுத்துவதாக இருந்தால் அவர் விடுப்பில் சென்றிருப்பார். ஆனால் தனியர் அவ்வாறு செல்லவில்லை. அலுவலகப் பணிதொய்வின்றி நடக்க ஏதுவாக தொடர்ந்து பணிபுரிந்து வந்தார். மேலும், அவர் டி2 இருக்கைக்கு வேறு பணியாளர் யாரும் அமர்த்தப்பட்டால், அசல் ஆவணங்களை அவரிடம் ஒப்படைப்பதற்காக அப்பிரிவில் இருந்ததாகவும், விரைவில் 9 மாதகால களப்பயிற்சிக்கு அனுப்பப்பட இருந்ததாகவும், ஆகவே, தான் தொடர்ந்து டி2 இருக்கையில் பணியாற்றியதாகவும் மேல்முறையீட்டில் குறிப்பிட்டதை ஏற்று, திரு ஜே.எம். மனோகர் அவர்களுக்கு வழங்கப்பட்ட 'கண்டனம்' எனும் தண்டனையை ரத்து செய்ய முடிவு செய்து அவ்வாறே, அரசாணை (2டி) எண்.66, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நாள் 18-10-2007-ல் ஆணையிடப்பட்டது. மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து அரசு மாறுபட்டு முடிவெடுத்துள்ளது.

**<u>இனம் – 2</u>**

திரு பி. பெரியநாயகம், முதன்மை பயிற்றுநர்/ தொழில் மற்றும் வணிக உதவி இயக்குநர், தொழிற் பயிற்சி மையம், கிண்டி (முன்னாள் உதவிப் பொறியாளர், மாவட்டத் தொழில்மையம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி) என்பவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையாக, அவரை அரசுப் பணியிலிருந்து "பணியறவு" செய்ய உத்தேச முடிவெடித்து, அதன்மீதான தேர்வாணையத்தின் கருத்தினைத் தனது 25.7.2005 நாளிட்ட கடிதம் மூலமாக அரசு கோரியது.

2. தேர்வாணையம், தனது 4.4.2006 நாளிட்ட கடிதத்தில் அரசின் உத்தேச முடிவினை ஏற்று குற்ற அலுவலர் அரசுப் பணியிலிருந்து "பணியறவு" செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

3. ஆனால், அரசு, தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு, குற்ற அலுவலருக்கு "கட்டாய ஓய்வு" எனும் தண்டனையை வழங்கி அரசாணை (நிலை) எண். 2, சிறுதொழில் (E–II) துறை, நாள் 19.01.2007 ல் ஆணை பிறப்பித்துள்ளது.

4. தேர்வாணையம், குற்ற அலுவலர் மீது "அரசுப் பணியிலிருந்து பணியறவு" என்னும் தண்டனையை சுமத்தலாம் என ஆலோசனை தெரிவித்திருந்தது. ஆனால் அரசு, தேர்வாணையத்தின் ஆலோசனையை ஏற்காது அதிலிருந்து மாறுபட்டு அரசாணை வெளியிட்டுள்ளது.

<u>தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு முடிவெடுத்ததற்கான காரணங்கள்:–</u>

திரு பி. பெரியநாயகம், தொழில் மற்றும் வணிக உதவி இயக்குநர் மீது வருவாய்க்கு அதிகமாக சொத்து சேர்த்ததாகவும் மற்றும் முதல் மனைவி உயிரோடு இருக்கையிலேயே, திருமதி பி. மகேஸ்வரி என்பவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளில், அவர் மீது நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்காக, அவரை அரசுப் பணியிலிருந்து பணியறவு (Dismissal from service) செய்யலாம் என்ற தண்டனை வழங்க கருதப்பட்டது.

2. குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் முன்னாள் இராணுவத்தினர் என்பதாலும், அவரது முதல் மனைவி இறந்துவிட்டதாலும், கருணை அடிப்படையில், திரு பி. பெரியநாயகம், முதன்மை பயிற்றுவிப்பாளர்/தொழில் மற்றும் வணிக உதவி

இயக்குநர், அரசு தொழில் நுட்ப பயிற்சி நிலையம், கிண்டி அவர்கள் மீது நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்காக 'பணியிலிருந்து கட்டாய ஓய்வு' என்ற தண்டனையாக குறைத்து வழங்க தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு முடிவெடுத்து, அவ்வாறே அரசாணை (நிலை) எண். 2, சிறுதொழில் துறை, நாள் 19.01.2007ல் ஆணை வெளியிடப்பட்டது.

**இனம்–3**

திரு அ.தி. பரஞ்சோதி என்பவர் உதவி ஆணையர்/செயல் அலுவலராக அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில், சுவாமிமலையில் பணியாற்றியபோது பெறப்பட்ட புகாரின் அடிப்படையில், திருக்கோயில் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தை உயர் அலுவலர்களுக்கு, பல நினைவூட்டுக் கடிதங்களுக்குப் பிறகும் சமர்ப்பிக்காததால் அன்னார் உயர் அலுவலரின் ஆணையை மதிக்காமல் கடமை தவறி செயல்பட்டார் என்று குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு "கண்டனம்" என்னும் தண்டனை விதிக்கப்பட்டது. அத்தண்டனைக்கு எதிராக, அன்னார் அரசுக்கு மேல்முறையீடு செய்ததில், அரசு மேல்முறையீட்டின் மீதான தேர்வாணைத்தின் கருத்தை 2005–ல் கோரியிருந்தது. தேர்வாணையம் வழக்கினை ஆய்வு செய்தது. மேல்முறையீட்டாளர், 9.10.2002 தேதிய விவரம் கோரிய குறிப்பாணைக்கு குற்றச்சாட்டு பிறப்பிக்கப்படும் வரையில் பதில் அனுப்பவில்லை என்றும், மேலும் நான்கு நினைவூட்டுகளுக்குப் பின்பும் பதில் அனுப்பவில்லை என்பதும் ஆவணங்களிலிருந்து தெளிவாகிறது என்றும், மேலும் மேலாளர் மற்றும் வருவாய் பிரிவு எழுத்தர் ஆகியோர் ஓராண்டுக்கு மேலாக முறையான விடுப்பு ஏதுமின்றி பணிக்கு வராமல் இருந்ததால் உரிய காலத்தில் கோரிய தகவலை அனுப்பவில்லை என்று தனது மேல்முறையீட்டில் கூறியிருப்பதை ஏற்றுக் கொள்ள இயலாது என்றும், ஏற்படக்கூடிய கால தாமதத்தைத் தவிர்க்க ஓர் இடைக்கால பதிலையாவது அனுப்பி இருக்கலாம் என்றும், ஆனால் அதுவும் செய்யப்படவில்லை என்றும் கருத்து தெரிவித்து, மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை நிராகரிக்க அரசுக்கு தனது 23.1.2006 நாளிட்ட கடிதத்தில் ஆலோசனை வழங்கியது.

2. ஆனால் அரசு, தேர்வாணையத்தின் கருத்துக்கு மாறுபட்டு, மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை ஏற்று, அன்னாருக்கு இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் வழங்கப்பட்ட "கண்டனம்" என்னும் தண்டனையை ரத்து செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

**தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு முடிவெடுத்ததற்கான காரணங்கள்:–**

கும்பகோணத்தில் உள்ள அருள்மிகு சுவாமிநாதசாமி திருக்கோயில், சுவாமிமலையில் உதவி ஆணையர்/நிர்வாக அலுவலராகப் பணியாற்றிய

திரு அ.தி. பரஞ்ஜோதி என்பவர் மீது நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்காக இந்து சமய மற்றும் அறநிலையத் துறை ஆணையரது 20.05.2004 நாளிட்ட நடவடிக்கைகளில் அவர்மீது 'கண்டனம்' என்ற தண்டனை வழங்கப்பட்டது.

2. இந்து சமய அறநிலையத் துறை ஆணையரால் வழங்கப்பட்ட மேற்குறிப்பிட்ட 'கண்டனம்' என்ற சிறு தண்டனையை எதிர்த்து தனியர் மேல்முறையீடு செய்தார். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தனது 23.01.2006 நாளிட்ட கடிதத்தில் திரு அ.தி. பரஞ்ஜோதி, உதவி ஆணையரது மேல்முறையீட்டை நிராகரிக்க கருத்து தெரிவித்தது.

3. திரு அ.தி. பரஞ்ஜோதி, உதவி ஆணையரது மேல்முறையீட்டினை தொடர்புடைய ஆவணங்களுடன் பரிசீலித்து, கீழ்க்கண்ட காரணங்களுக்காக அவரது மேல்முறையீட்டை ஏற்று அவருக்கு வழங்கப்பட்ட 'கண்டனம்' என்ற தண்டனையை ரத்து செய்ய அரசு முடிவெடுத்தது :–

(i) அவர்மீது கையொப்பமிடப்படாத புகார் மனுவில் அளிக்கப்பட்ட குற்றஞ்சாட்டுகளுக்கு உரிய காலத்தில் அவரிடம் கோரப்பட்ட அறிக்கையை அனுப்பாமல் இருந்ததற்காக அவருக்குக் 'கண்டனம்' வழங்கப்பட்டது;

(ii) திருவலஞ்சுழி, அருள்மிகு கபர்தீசுவரர் திருக்கோயிலின் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக சில அரசியல் கட்சிகளால் அனுப்பப்பட்டதாக சொல்லப்படும் கையொப்பம் இடாத மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது பொய்யானதாகும். மேலும், கோயில் சொத்துக்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லை;

(iii) இந்து சமய மற்றும் அறநிலையத்துறை ஆணையரால் கோரப்பட்ட அறிக்கையினை அளிக்கத் தவறினார் என்ற ஒரே காரணத்திற்காக, அவர் மீது 'கண்டனம்' என்ற சிறு தண்டனையை வழங்குவது நியாயமாகாது ;

(iv) முன்னர் அவர் மீது எவ்வித குற்றச்சாட்டுகளோ, தண்டனையோ வழங்கப்படவில்லை. அவர் மிகத் திறமையாகப் பணியாற்றினார்.

4. எனவே, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக, அரசாணை (டி) எண். 26, தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 25.01.2007ல் அளிக்கப்பட்ட 'கண்டனம்' என்ற தண்டனையை ரத்து செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

<u>இனம் – 4</u>

திரு எம். ஜெயக்குமார் என்பவர் திருச்சி மத்திய சிறையில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, வேலூர் காவலர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்று வந்த போது மேலதிகாரியிடம் ஒழுங்கீனமாக நடந்து கொண்டமைக்கு, அவர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(ஆ)வின் கீழ் குற்றச்சாட்டு சுமத்தி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவரின் விளக்கம் பெறப்பட்டது. இறுதியில் மனுதாரர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகின்றது என்று முடிவு செய்து நிரூபணமான குற்றச்சாட்டிற்கு தண்டனையாக மனுதாரருக்கு ''பணியறவு'' என்னும் தண்டனை வழங்கி, வேலூர் மத்திய சிறைக் கண்காணிப்பாளரால் ஆணையிடப்பட்டது.

2. மேற்கண்ட தண்டனையை எதிர்த்து சென்னை சரக சிறைத் துறைத் தலைவருக்கும், அதைத் தொடர்ந்து சென்னை கூடுதல் சிறைத் துறை இயக்குநருக்கும் மனுதாரர் செய்து கொண்ட மேல்முறையீடு/சீராய்வு மனு நிராகரிக்கப்பட்ட நிலையில், அன்னார் இறுதியில் அரசுக்கு மனு செய்து கொண்டார். அரசு, 2005ம் ஆண்டு, மேற்கண்ட மனு மற்றும் அது தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைத்து, அதன் மீது தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. இவ்வழக்கை தொடர்புடைய ஆவணங்களுடன் பரிசீலனை செய்த தேர்வாணையம், மனுதாரரின் செயல், பயிற்சிக் காவலர் மத்தியில் ஒழுங்கீனத்தை வளர்க்கக் கூடிய கட்டுப்பாட்டை மீறிய செயல் என்பதாலும், சீருடைப் பணியாளர்களுக்குரிய சகிப்புத் தன்மையைச் சீர்குலைக்கக் கூடிய செயல் என்பதாலும், இது மற்றைய காவலர்களையும் தூண்டக் கூடிய செயல் என்பதாலும், இவருக்கு வழங்கப்பட்ட ''பணியறவு'' தண்டனையை உறுதி செய்து ஆணையிடலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

3. ஆனால், அரசு மேற்கண்ட தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறுபட்டு, மனுதாரருக்கு அளிக்கப்பட்ட ''பணியறவு'' என்னும் தண்டனையை ரத்து செய்துவிட்டு, அவரை மீண்டும் பணியில் சேர்த்தும், ''பணியறவு'' எனும் தண்டனைக்குப் பதிலாக, ''ஊதிய உயர்வு ஐந்து வருடங்களுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தம்'' என்ற தண்டனை வழங்கியும் ஆணை பிறப்பித்துள்ளது.

4. மனுதாரர் புரிந்த குற்றத்தின் கடுமையைக் கருத்தில் கொண்டு, அவருக்கு வழங்கப்பட்ட ''பணியறவு'' என்ற தண்டனையை உறுதி செய்ய தேர்வாணையம்

ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது அதற்கு மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

<u>தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு முடிவெடுத்ததற்கான காரணங்கள்:—</u>

திருச்சி மத்திய சிறை, இரண்டாம் நிலைக் காவலர் திரு எம். ஜெயக்குமார், வேலூர் காவலர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்று வந்தபோது, **01–07–2004** அன்று காலை கவாத்து திடலில் உடற்பயிற்சி வகுப்பு நடத்தி முடிக்கப்பட்டு பயிற்சிக் காவலர்கள் அனைவருடன் நின்று கொண்டிருக்கையில், பயிற்சிப்பள்ளி சிறை அலுவலர் அனைத்து பயிற்சிக் காவலர்களிடமும் அன்று சிறைக் கண்காணிப்பாளர் அவர்கள், காவலர் பயிற்சிப் பள்ளியை பார்வையிட வருவதைத் தெரிவித்து, அனைத்து பயிற்சிக் காவலர்களும் அவரவர் இருப்பிடத்தை சுத்தமாகவும், தூய்மையாகவும் வைத்திருக்க அறிவுறுத்திக் கொண்டிருக்கும் போது, திடீரென்று திரு எம்.ஜெயக்குமார், பயிற்சிக் காவலர் அநாகரீகமான வார்த்தைகளால் பயிற்சிப் பள்ளி சிறை அலுவலரை ஆவேசத்துடனும், ஆபாசமாகவும் திட்டியது தொடர்பாக, அவர்மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17 (ஆ) ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அவருக்கு வேலூர் மத்திய சிறைக் கண்காணிப்பாளரால் 'பணியறவு' என்ற தண்டனை வழங்கப்பட்டது. மேற்படி தண்டனையை எதிர்த்து, அவர் சென்னை சரக சிறைத்துறை துணைத்தலைவருக்கு அளித்த மேல்முறையீடு மற்றும் கூடுதல் சிறைத்துறை இயக்குநருக்கு அளித்த மனு ஆகியவை நிராகரிக்கப்பட்ட நிலையில் அரசுக்கு மனு சமர்ப்பித்தார். அவரது மனு பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன்மீது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒழுங்கு முறைகள் 1954—ல், ஒழுங்குமுறை 19ன் கீழ் தேர்வாணையத்தின் கருத்து கோரப்பட்டது. தேர்வாணையம் தனது கருத்தில், நிரூபணமான குற்றச்சாட்டின் தன்மையை ஆராயும்போது, இவருக்கு வழங்கப்பட்ட 'பணியறவு' என்னும் தண்டனை சரியானதே எனத் தீர்மானித்து, இவரது மனுவை நிராகரிக்கலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

2. இந்நேர்வில், மனுதாரர் திரு எம். ஜெயக்குமார் என்பவர் அரசுக்கு அளித்துள்ள கருணை மனு, தொடர்புடைய ஆவணங்களுடனும், தேர்வாணையத்தின் கருத்துடனும் பரிசீலனை செய்யப்பட்டது. திரு எம். ஜெயக்குமார் என்பவர், சிறை அலுவலர் அவர்களை கேவலமான வார்த்தைகளால் திட்டியதற்குப் பதிலாக, அங்கு பணியிலிருந்த திரு. அப்துல் யூசுப் என்ற உதவி சிறை அலுவலர் மிகமிக கேவலமான வார்த்தைகளால் பயிற்சிக் காவலர்களைத் திட்டியதாகத் தெரிகிறது. இது அரசுத் தரப்பு சாட்சியான பயிற்சிக்

காவலர் திரு பி. கோசலைப்பெருமாள் என்பவரின் வாக்குமூலத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவர்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனத் தெரிகிறது. மேலும், மனுதாரர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டிற்கு அவருக்கு அளிக்கப்பட்ட 'பணியறவு' என்னும் தண்டனை மிகவும் கடுமையானது எனக் கருதப்பட்டது. எனவே, தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறுபட்டு, திரு எம். ஜெயக்குமார், இரண்டாம் நிலைக் காவலருக்கு "பணியறவு" என்ற தண்டனையை ரத்து செய்யவும், அவரை மீண்டும் பணிநியமனம் செய்து கீழ்க்கண்ட தண்டனையை வழங்கலாம் என முடிவெடுக்கப்பட்டது:–

> " இவரது ஊதிய உயர்வு ஐந்து வருடத்திற்கு திரண்ட பயனுடன் நிறுத்தி வைக்கப்படுகிறது. மனுதாரர் தற்செயல் விடுப்பு தவிர ஏனைய விடுப்புகளில் சென்றால், தண்டனைக் காலம் நீடிக்கும் தன்மையுடையது. இது இவரது ஓய்வூதியத்தை பிற்காலத்தில் பாதிக்கும்."

அவ்வாறே, அரசாணை (நிலை) எண். 1207, உள்துறை, நாள் 18.12.2006ல் ஆணைகள் வெளியிடப்பட்டன.

**<u>இனம் – 5</u>**

நவம்பர் 2005ல் அரசு, திரு.வி.பகவதிபாண்டி, கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் (ஓய்வு) என்பவரின் மீது, அன்னார் கமுதி கூட்டுறவு நகர வங்கியில் 14.12.1997 முதல் 25.05.2000 வரை கூட்டுறவு சார் பதிவாளர் / மேலாண்மை இயக்குநராகப் பணிபுரிந்த போது, அவ்வங்கியில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்த 5 நபர்களுக்கு, இவரது பணிக்காலத்தில் முறையற்ற வகையில் 18(1) ஒப்பந்தம் ஏற்படுத்தியது மற்றும் தினக்கூலிப் பணியாளர்களாக 4 நபர்களைப் பணியமர்த்தியது ஆகிய முறையற்ற நியமனங்களுக்காக, தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(ஆ) மற்றும் தமிழ்நாடு ஓய்வூதிய விதி 9ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளில் நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையாக, அவரது ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.200/– வீதம் ஆறு மாதங்களுக்குப் பிடித்தம் செய்வது குறித்து, தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியிருந்தது.

2. தேர்வாணையம், இவ்வழக்கினை ஆய்வு செய்து நிரூபணமான குற்றச்சாட்டிற்குத் தண்டனையாக, மாதம் ரூ.200/– வீதம் ஆறு மாதங்களுக்கு அன்னாரது ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்ய அரசு எடுத்த உத்தேச முடிவு சரியானதுதான் எனக்கருதி அவ்வாறே அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

3. அரசு, மீண்டும் பிப்ரவரி 2007ல் குற்றம் சாட்டப்பட்ட அலுவலர், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்குகளின் நீதிமன்ற ஆணைகளை அமல்படுத்துவதற்கு ஏதுவாக, அன்னாரின் மீதான குற்றச்சாட்டுகளை வலியுறுத்தாமல் கைவிடலாம் என முடிவெடுத்து, தேர்வாணையத்தின் திருத்திய கருத்தினைக் கோரியது.

4. தேர்வாணையம், தகுதியின் அடிப்படையில் குற்றச்சாட்டுகளைக் கைவிட எந்தக் கருத்தையும் அரசு தெரிவிக்கவில்லை என்றும், ஏற்கனவே தெரிவித்த கருத்தை மறுபரிசீலனை செய்வதற்கு சரியான முகாந்திரமில்லை எனக் கருதி, தனது முந்தைய கருத்தையே மீண்டும் வலியுறுத்துவதாக ஆலோசனை வழங்கியது.

5. ஆனால், அரசு, குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தாக்கல் செய்துள்ள சூழ்நிலையில், தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறுபட்டு, அன்னார் மீதான ஒழுங்கு நடவடிக்கையினை வலியுறுத்தாமல் கைவிடலாம் என்று ஆணை பிறப்பித்துள்ளது.

6. தேர்வாணையம், வழக்கின் தன்மையையும் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு தண்டனை வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால், அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

<u>தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு முடிவெடுத்ததற்கான காரணங்கள்:—</u>

திரு வி. பகவதி பாண்டி, கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் (தற்காலிகப் பணிநீக்கம்) மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(ஆ)ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு, அரசு ஆணை (2டி) எண். 131, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 30—11—2001—ல் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டார். அதன்பின், அரசு ஆணை (3டி) எண். 41, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 30—11—2001ல், அவரை ஓய்வு பெற அனுமதிக்காமல், அடிப்படை விதி 56(1) (சி)ன் கீழ் அவரது பணியினை நீட்டித்து ஆணைகள் வெளிடப்பட்டன.

2. திரு வி. பகவதி பாண்டி, கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் (தற்காலிகப் பணிநீக்கம்) அவர்கள், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்திருந்த அசல் மனுவில் (மனு எண். 574/2002), தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் 23—01—2003ம் நாளிட்ட தனது ஆணையில், 3 மாதங்களுக்குள் அன்னாரது ஒழுங்கு நடவடிக்கையில்

இறுதி ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும், தவறினால் ஒழுங்கு நடவடிக்கை தள்ளுபடி செய்யப்பட்டதாகக் கருதப்படும் என்றும் ஆணை பிறப்பித்தது.

3. இவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில், நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையாக, இவரது ஓய்வூதியத்திலிருந்து ஆறு மாதங்களுக்கு மாதம் ரூ. 200/–வீதம் பிடித்தம் செய்யலாம் என அரசு உத்தேச முடிவெடுத்தது. அவர் அந்த உத்தேச தண்டனையை ஏற்றுக்கொள்ளாததால், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்து கோரப்பட்டது.

4. இதற்கிடையில், இவ்வாணையின் மீது அரசு மேல் முறையீடு செய்வது குறித்து ஆய்வில் இருந்த நிலையில், திரு வி. பகவதி பாண்டி, கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் (தற்காலிகப் பணி நீக்கம்) அவர்கள் மீண்டும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிப் பேராணை மனுவில் (எண். 36183/2004), சென்னை உயர்நீதிமன்றம் தனது 09–12–2004 நாளிட்ட தீர்ப்பில், அத்தீர்ப்பின் நகல் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து பன்னிரண்டு வாரங்களுக்குள் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பினை அமல்படுத்துமாறு ஆணையிட்டது. உயர் நீதிமன்றத் தீர்ப்பில் அளிக்கப்பட்ட கால அவகாசமும் மார்ச் 2005 உடன் முடிவடைந்திருந்தது.

5. மேற்கண்ட சூழ்நிலையில், தற்காலிகப் பணிநீக்கத்திலிருந்த துணைப்பதிவாளர் திரு வி. பகவதி பாண்டி, அடிக்கடி அரசுக்கு செய்துகொண்ட முறையீட்டினைத் தொடர்ந்து, இந்நேர்வினை அரசு மறு ஆய்வு செய்தது. திரு வி. பகவதி பாண்டி, கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் (தற்காலிகப் பணிநீக்கம்) அவர்கள் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்று ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், அவருடைய ஓய்வூதியப் பலன்கள் ஏதும் பெற முடியாமல் இருந்து வருவதாலும், உயர்நீதிமன்றம் அளித்த கால அவகாசம் மார்ச் 2005லேயே முடிவடைந்துவிட்ட நிலையிலும், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் மற்றும் உயர்நீதிமன்ற ஆணைகளை அமல்படுத்துவதற்கு ஏதுவாகவும், இவருக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை வலியுறுத்தாமல் கைவிடலாம் என அரசு முடிவெடுத்து, தனியரின் ஓய்வூதியப் பிடித்தம் தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் ஏற்கனவே கோரியிருந்த அரசின் கருத்துருவினை திரும்பப் பெறலாம் எனவும் அரசு திருத்திய முடிவெடுத்தது. நிர்வாக நடைமுறைகள் காரணமாக, அரசின் திருத்திய முடிவினை தேர்வாணையத்திற்கு தெரியப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டது. இதற்கிடையில், தேர்வாணையம், தனியரது ஓய்வூதியத்தில்

ஆறுமாதங்களுக்கு ரூ.200/– வீதம் பிடித்தம் செய்யலாம் என்ற தனது முந்தைய கருத்தினையே மீண்டும் வலியுறுத்தி அரசுக்கு அனுப்பி வைத்தது.

6. இதற்கிடையில், உயர்நீதிமன்ற ஆணையின்படி, தன் மீதான ஒழுங்கு நடவடிக்கையினைக் கைவிட்டு, ஓய்வூதியப் பலன்களை வழங்கக் கோரி, திரு. வி. பகவதி பாண்டி, கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் (தற்காலிகப் பணிநீக்கம்)அவர்கள், சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார்.

7. மேற்கூறியவாறு, தனியரால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்ட நிலையில், தேர்வாணையத்தின் அறிவுரைக்கு மாறுபட்டு, திரு. வி. பகவதி பாண்டி, கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் (தற்காலிகப் பணிநீக்கம்) மீது இந்நேர்வில் குறிப்பிடப்படும் ஒழுங்கு நடவடிக்கையினை வலியுறுத்தாமல் கைவிடலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணை (டி) எண்.161, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 28–05–2007ல் அரசு ஆணையிட்டுள்ளது.

**<u>இனம் – 6</u>**

திரு எஸ். பாலசுப்பிரமணியன் என்பவர் திருவள்ளூர் மாவட்டத்தில் திட்ட அலுவலராகப் பணியாற்றிய காலத்தில், சுகாதார வளாகங்களைத் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்யாதது, சுகாதார வளாகங்களுக்குத் தனிப்பட்ட நீர்ஆதாரம் ஏற்படுத்தித் தராமல் குடிநீர் குழாயில் இருந்து இணைப்பு அனுமதி அளித்தது, சுகாதார வளாகங்களைக் கட்டி முடிக்காதது மற்றும் வளாகங்கள் கட்டுதல் குறித்த பணியினை அவ்வப்போது கண்காணிக்காதது போன்ற குறைபாடுகளுக்காக அவர்மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(அ)வின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அன்னாரின் விளக்கம் பெறப்பட்டது. இறுதியில் நிரூபிக்கப்பட்ட குறைபாடுகளுக்காக, மேல்முறையீட்டாளருக்கு ஊதிய உயர்வினைத் திரண்ட பயனின்றி ஒரு மாத காலத்திற்கு நிறுத்தம் என்னும் தண்டனை வழங்கி ஊரக வளர்ச்சி இயக்குநரால் ஆணையிடப்பட்டது.

2. மேற்கண்ட தண்டனையை எதிர்த்து, மேல்முறையீட்டாளர் அரசுக்கு மேல்முறையீடு செய்து கொண்டார். அரசு, கடந்த 2004–ஆம் ஆண்டு மேற்கண்ட மேல்முறையீடு மற்றும் அது தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைத்து, அதன்மீது

தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. இவ்வழக்கை தொடர்புடைய ஆவணங்களுடன் பரிசீலனை செய்த தேர்வாணையம், மேல்முறையீட்டாளரின் செயல்பாடுகள் பொறுப்பற்ற முறையில் இருக்கின்றன என்பதையும், கடமை தவறி செயல்பட்டுள்ளார் . என்பதையும் கண்டறிந்தது. இந்நிலையில் மேல்முறையீட்டைச் சாரமற்றதாகக்கருதி தள்ளுபடி செய்து ஆணையிடலாம் என அரசுக்குத் தேர்வாணையம் தனது ஆலோசனையை வழங்கியது.

3. அரசு மேற்கண்ட தேர்வாணைய ஆலோசனையிலிருந்து மாறுபட்டு, மேல்முறையீட்டாளருக்கு தண்டனை விதித்து ஊரக வளர்ச்சி இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையைத் தள்ளுபடி செய்தும், மேல்முறையீட்டாளரைக் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்தும் ஆணை பிறப்பித்துள்ளது.

4. இந்நேர்வில் மேல்முறையீட்டாளர், உண்மையில் பணியில் குறைபாடுகள் புரிந்துள்ளார் என்று கண்டறிந்த நிலையில், அவருக்கு வழங்கப்பட்ட "ஊதிய உயர்வினைத் திரண்ட பயனின்றி ஒரு மாத காலத்திற்கு நிறுத்தம்" என்ற தண்டனையை உறுதி செய்ய தேர்வாணையம் ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு, தேர்வாணையத்தின் ஆலோசனையை ஏற்காது, அதற்கு மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

<u>தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு முடிவெடுத்ததற்கான காரணங்கள் :–</u>

மேல்முறையீட்டாளர் திருவள்ளூர் மாவட்ட மகளிர் திட்ட அலுவலராக 21–03–2002ல் பணியில் சேர்ந்துள்ளார். திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் பணியிடம் அக்டோபர் 2001 லிருந்து காலியாக இருந்த நிலையில், அவருக்கு 02–05–2002 முதல் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 7 மாதகாலமாக திட்ட அலுவலர் பணியிடம் நிரப்பப்படாத நிலையில், குறிப்பிட்ட காலத்தில், அனைத்து தல ஆய்வுகளையும் மேற்கொள்ள இயலவில்லை என்ற முறையீட்டாளரின் விளக்கம் ஏற்று கொள்ளக் கூடியதாக உள்ளதாலும், கூடுதல் பொறுப்பில் இருந்துள்ள குறுகிய காலத்தில், ஊரக வளர்ச்சி இயக்குநரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு, மேல்முறையீட்டாளரை முற்றிலும் பொறுப்பாக்குவது சரியாக இராது. கூடுதல் பொறுப்பில் உள்ள அலுவலர் செய்யக்கூடிய பணிகளில் வரையறை உள்ளது. மேலும், கிராம ஊராட்சிகளில் மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் என்ற திட்டம் ஏறக்குறைய மாநிலத்தின் எல்லா இடங்களிலுமே தோல்வியுற்ற திட்டமாகும். எனவே, ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களால், திரு எஸ். பாலசுப்பிரமணியத்தின் ஊதிய

உயர்வினை திரண்ட பயனின்றி ஒரு மாதத்திற்கு நிறுத்திவைத்து வழங்கப்பட்ட தண்டனையை இரத்து செய்து, அவரைக் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கலாமென முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணை (டி) எண். 93, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 02–03–2007ல், அரசு ஆணையிட்டுள்ளது. மேற்கண்ட காரணங்களுக்காக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து அரசு மாறுபட்டு முடிவெடுத்துள்ளது.

/ உண்மை நகல் /

பா. திரு. சுப்பரமணி
பிரிவு அலுவலர் 25/3/09

நாம்,
25.03.09